ஸ்ரீ

லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞாநாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - ௧௦.] துர்முகிஷு வைகாசிமீ. [எண் - ௫.

வேதாகமப்பிரகரணம்.

சாமவேதசம்பந்தமான
ஜாபால்லியுபநிடதம்.

ఆప్యాయంత్విశాంతిః.

ఓం॥ అథ హైనం భగవంతం జాబాలిం పైప్పలాదిః
 పప్రచ్ఛ ।
భగవన్మే బ్రూహి పరమతత్త్వ రహస్యం ।
కిం తత్త్వం కో జీవః కః పశుః క ఈశానః ।
కో మోక్షోపాయ ఇతి సతంహోవాచ ।

மங்களம். பகவானுன ஜாபாலியை நோக்கி, பைப்பலாதர் கேட்பாராயினர். ஏ பகவானே! பரம தத்துவ இரகசியங்களை எனக்குச் சொல்லும். தத்துவம் எது? ஜீவன் எவன்? பசு எது? ஈசானன் எவன்? மோக்ஷோபாயம் எது? என்று கேட்டனர்.

సాధుపృష్టం సర్వం నివేదయామి యదాజ్ఞాతమితి ।
పునస్సత మువాచ కుతస్త్వ యాజ్ఞాతమితి ।
పునస్సత మువాచ షడాననాదితి ।

அதற்கு ஜாபாலி, பைப்பலாதரோ! நன்றாய்க் கேட்டீர்! நீர் அறியப்படாதவைகளை யெல்லாம் சொல்லுகிறேனென்றார். மறுபடியும் பைப்பலாதர் எவராலே இந்த விஷயங்களை அறிந்தீரென்ன? சண்முகக்கடவுளாலென்று ஜாபாலி சொன்னார்.

పునస్సత మువాచ తే నాథ కుతో జ్ఞాతమితి ।
పునస్సత మువాచ తేనేశానాదితి ।

மறுபடியும் பைப்பலாதர் அச்சண்முகக்கடவுள் எவராலே யறிந்தாரென்றுகேட்க, ஈச்சுவரனாலே யறிந்தா ரென்று ஜாபாலி சொன்னார்.

పునస్సత మువాచ అథ కస్మాత్తేన జ్ఞాతమితి ।
పునస్సత మువాచ తదుపాసనాదితి ।

பின்னும் ஈச்சுவரன் எப்படியறிந்தா ரென்று பைப்பலாதர் கேட்க, அவருடைய உபாசனத்தாலே யென்று ஜாபாலி சொன்னார்.

పునస్సత మువాచ భగవన్కృపయా మే రహస్యం ।
సర్వం నివేదయేతి సతేన పృష్టస్సర్వం నివేదయా మాస
 తత్త్వం ।

மறுபடியும் பைப்பலாதர், பகவானே! கிருபையாலே அந்த இரகசிய மெல்லாம் எனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டார். அந்த ஜாபாலி பைப்பலாதராலே கேட்கப்பட்டவராய், எல்லா தத்துவத்தையும் சொல்லுவாராயினர்.

పశుపతి రహంకారావిష్ట స్సంసారి జీవస్స ఏవ పశుః ।
సర్వజ్ఞః పంచకృత్యసంపన్న స్సర్వేశ్వర ఈశః పశుపతిః ।

அகங்காரத்தாலே கூடியிருக்கிற ஈச்சுவரனே சமுசாரியான ஜீவன்; அவனே பசு; சர்வஞ்ஞனாய் ஐந்து கிருத்தியங்களோடே கூடியிருக்கிற சர்வேச்சுரனுன பசுபதியே ஈசன்.

కే పశవ ఇతి పునస్సత మువాచ జీవాః పశవ ఉక్తాః ।
తత్పతిత్వా త్పశుపతి స్సపునస్తం హోవాచ ।

பசுக்கள் எவையென்று மறுபடியும் பைப்பலாதர் ஜாபாலியைக் கேட்டார். ஜீவர்கள் பசுக்

களென்று சொல்லப்படுகிருர்கள். அந்த ஜீவர்களுக்கு பிரபுவானபடியினுலே பசுபதி என்று சொல்லுகிருர்கள். என்று ஜாபாலி சொன்னுர்.

కథం జీవాః పశవ ఇతి కథం తత్పతిరితి స తమువాచ
యథా తృణాశినో వివేకహీనాః పరప్రేష్యాః ।
కృష్యాదికర్మసు నియుక్తాస్సకల దుఃఖ సహాస్స్వ
స్వామి బధ్యమానా గవాదయః పశవః ।
యథా తత్స్వామిన ఇవ సర్వజ్ఞ ఈశః పశుపతిః ।

ஜீவர்கள் பசுக்களாவ தெப்படி? அவற்றிற்குப் பிரபு எப்படி யென்று மறுபடியும் பைப்பலாதர் ஜாபாலியைக் கேட்டார். ஜாபாலி பைப்பலாதரை நோக்கி சொல்லுகிருர். எப்படி புல்லருந்தி, விவேகமின்றி, ஒருவராலே தூண்டப்பட்டு, கிருஷிமுதலான கர்மங்களிலே நியமிக்கப்பட்டு, சகல துக்கங்களேயும் சகித்து தன்னுடைய எஜமானனுலே கட்டப்படுகிற எருது முதலானவைகள் பசுக்களோ? அவைகளுக்கு எஜமானன்எப்படியோ, அப்படியே சகலமுமறிந்த ஈசன் பசுபதி.

తజ్జ్ఞానం కేనోపాయేన జాయతే పునస్స తమువాచ ।
విభూతి ధారణాదేవ తత్ప్రకారః కథమితి ।
కుత్ర కుత్ర ధార్యం పునస్స తమువాచ ।

அவனே யடைகிற ஞானம் எந்தவுபாயத்தினுலே உண்டாகிறது என்று பைப்பலாதர் கேட்க, ஜாபாலி விபூதிதாரணத்தினுலே என்று சொன்னுர். அதினுடைய பிரகாரம் எப்படி? எவ்வெவ்விடத்திலே தரிக்கவேண்டியது என்று பைப்பலாதர் மறுபடியும் கேட்க, ஜாபாலி சொல்லுகிருர்.

సద్యోజాతాది పంచబ్రహ్మ మంత్రైర్భస్మసంగృహ్యాగ్నిరితి
భస్మేత్యనేనాభి మంత్ర్య మానస్తోక ఇతి
సముద్ధృత్య జలేన సంసృజ్య త్ర్యాయుషమితి
శిరోలలాట వక్షస్కంధేష్వితి
తిసృభి స్త్ర్యాయుషై స్త్ర్యంబకై స్తిస్రో రేఖాః ప్రకుర్వీత।

"ஸத்யோஜாத" என்பது முதல் ஐந்து பிரம்மமந்திரங்களாலே பஸ்மத்தை எடுத்து, "அக்கினி", "பஸ்ம" என்கிற மந்திரங்களினுலே அபிமந்திரித்து, "மானஸ்தோக" என்று எடுத்து ஜலத்தினுலே குழைத்து, தலே, நெற்றி, மார்பு, புஜங்கள் இவைகளிலேமூன்றுன திரியம்பக சம்பந்தமுடைய "திரியாயுஷங்கள்" என்கிற மந்திரங்களாலே மூன்று ரேகைகளேத் தரிக்கவேண்டியது.

వ్రతమేతచ్ఛాంభవం సర్వేషు వేదేషు ।
వేదవాదిభిరుక్తం భవతి తత్సమాచరే న్ముముక్షుర్నపునర్భ
వాయ ।

இது சாம்பவ விரதமென்று சகல வேதங்களிலேயும் வேதவாதிகளாலே சொல்லப்பட்ட தாகின்றது. புனர்ஜன்ம மில்லாமைக்கு முமுக்ஷுவானவன் இந்த விரதத்தை யனுஷ்டிக்க வேண்டியது.

అథ సనత్కుమారః ప్రమాణం పృచ్ఛతి
త్రిపుండ్రధారణస్య త్రిధా రేఖా
ఆలలాటాదా చక్షుషోరాభ్రువోర్మధ్యతశ్చ ।

பின்பு, சனத்குமாரர் திரிபுண்டர தாரணத்துக்குப் பிரமாணத்தைக் கேட்க, (ஜாபாலி சொல்லுகிருர்.) திரிபுண்டரதாரணத்துக்கு மூன்று ரேகைகள். அவைகளே நெற்றியிலும், கண்ணிலும், புருவங்களின் மத்தியிலும் இடவேண்டியது.

యాస్య ప్రథమా రేఖా సా గార్హపత్యశ్చా
కారో రజో భూర్లోక స్స్వాత్మా క్రియాశక్తిః
ఋగ్వేదః ప్రాత స్సవనం ప్రజాపతి ర్దేవో దేవతేతి ।

இதனுடைய முதல்ரேகையானது காரகபத்தியாக்கினி. இதற்கு, அகாரம், ரஜசு, பூலோகம், ஜீவாத்மா, கிருபை, இதுகளெல்லாம் சக்தி; வேதம், ருக்கு, யாகம் காலேயில் பண்ணத்தகுந்தது, தேவதை சதுர்முகப் பிரம்மா ஆம்.

యాస్య ద్వితీయా రేఖా సా దక్షిణాగ్ని రుకార స్సత్త్వ
మంతరిక్ష మంతరాత్మా చేచ్ఛా శక్తి
ర్యజుర్వేదో మాధ్యందినం సవనం విష్ణుర్దేవో దేవతేతి ।

திரிபுண்டரத்தினுடைய இரண்டாவது ரேகையானது தக்ஷணுக்கினி. இதற்கு, உகாரம், சத்துவம், ஆகாசம், அந்தராத்மா, இச்சை, இதுகளெல்லாம் சக்தி; வேதம், யஜுர், யாகம், மத்தியான்னத்தில்பண்ணத்தகுந்தது, தேவதை விஷ்ணு ஆம்.

యాస్య తృతీయా రేఖా సాహవనీయో మకార స్తమో
ద్యౌర్లోకః పరమాత్మా జ్ఞాన శక్తి
స్సామవేద స్తృతీయ సవనం దేవదేతి ।

இதினுடைய மூன்ருவது ரேகையானது, ஆகவனீயாக்கினி. இதற்கு, மகாரம், தமசு, சொர்க்கலோகம், பரமாத்துமா, ஞானம் இதுகளெல்லாம் சக்தி; வேதம், சாமம், யாகம், மாலேயில் பண்ணத் தகுந்தது, தேவதை மகாதேவன் ஆம்.

త్రిపుండ్రం భస్మనా కరోతి యో విద్వాన్ బ్రహ్మచారీ ।
గృహీ వానప్రస్థో యతి ర్వా స మహాపాతకోపపాతకేభ్యః ।

పూతో భవతి సససర్వా న్వేదానధీతో భవతి ।
ససర్వాం దేవా ధ్యాతో భవతి
ససర్వేషు తీర్థేషు స్నాతో భవతి ।
సకలరుద్ర మంత్ర జాపీ భవతి నసపునారావర్తతే
నసపునరావర్తత ఇతి ॥ ఓం సత్యమిత్యుపనిషత్ ॥

வித்துவானுன பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி இவர்களிலெவனுகிலும் பஸ்மத்தினுலே திரிபுண்டரந்தரித்தால் மகாபாதகங்களிலிருந்தும் உபபாதகங்களிலிருந்தும்பரிசுத்தனுகிருன். சமஸ்தவேதங்களையும் அத்தியயனம் பண்ணினவனுகிருன். சமஸ்த தேவதைகளையுந் தியானம்செய்தவனுகிருன். சமஸ்த தீர்த்தங்களிலும் ஸ்னானஞ் செய்தவனுகிருன். சகலருத்திரமந்திரங்களையும் ஜபித்தவனுகிருன். மறுபடியும்பிறக்கிறதில்லை. சத்தியம் என்று உபநிஷத்து முடிந்தது.

ஆப்பியாயந்த்விதிஸாந்திஃ.

பாஞ்சராத்திரம்.

பாரதம்.

నవనీతం యథాదధ్నో ద్విపదాం బ్రాహ్మణో యథా ।
ఆరణ్యకంచ వేదేభ్య ఓషధీభ్యో యథామృతం ॥
ఇదం మహోపనిషదం చతుర్వేద సమన్వితం ।
సాంఖ్యయోగ కృతాంతేన పంచరాత్రానుశబ్దితం ॥
ఇదం శ్రేయ ఇదం బ్రహ్మ ఇదం హితమనుత్తమం ।
ఋగ్యజుస్సామభిర్జుష్టమథర్వాంగిరసైస్తథా ॥
భవిష్యతి ప్రమాణం వై ఏతదేవానుశాసనం ॥

தயிருக்கு வெண்ணெய்போலவும், மனிதருக்கு ஆசாரியனுன பிராமணனைப் போலவும், வேதங்களுக்கு ஆரணியகம்போலவும், ஔஷதிகளுக்கு அமிருதம்போலவும், வேதவேதாந்த சாங்கிய யோகசித்தாந்தங்களாலே, பாஞ்சராத்திர மென்று சொல்லப்படுகிற இந்த மஹோபநிஷத்து சிரேயசுடையதாயும், பரப்பிரம்ம பிரதிபாதகமாயும், எல்லாவற்றிற்கும் மேலான மோக்ஷத்தை யுண்டாக்குவதாயும், இருக்கு, யஜுசு, சாமங்களாலும் அதர்வாங்கிரசங்க ளென்கிற இருவகையான அதர்வண வேதங்களாலும் கொண்டாடப்பட்டு, இனிவருங்காலமெல்லாம் எதிரற்ற பிரமாணமாகிக் கடவதாம்.

ஸ்ரீவாராகம்.

బ్రాహ్మణక్షత్రియవిశాం పాంచరాత్రం విధీయ్యతే ।
శూద్రాదీనాం నతుతచ్ఛ్రోత్రే పదవీ స్నోపయాస్యతి ॥

ఏవమ్మయోక్తం విప్రేంద్ర పురాకల్పం పురాతనం ।
పాంచరాత్రం సహస్రాణాం యదికశ్చిద్గ్రహీష్యతి ॥
కర్మక్షయే చమాంకశ్చి ద్యది భక్తో గమిష్యతి ।
తస్య వేదాః పాంచరాత్రం నిత్యం హృది వసిష్యతి ॥
అన్యచ్చ తే వరం దద్మి శృణు నారద సాంప్రతం ।
యదిదం పంచరాత్రం మే శాస్త్రం పరమదుర్లభం ॥
తద్భవాన్వేత్స్యతే ధర్మం మత్ప్రసాదాన్న సంశయః ।
వేదేన పంచరాత్రేణ భక్త్యా యజ్ఞేన చ ద్విజ ॥
ప్రాప్యోహం నాన్యథా ప్రాప్యో వర్షలక్షశతైరపి ॥

பிராமண க்ஷத்திரிய வைசியாளுக்கு பாஞ்சராத்திரம் படிக்கலா மென்று விதிக்கப்படுகின்றது. சூத்திராதிகளுக்கு இதைக்கேட்க வதிகாரமில்லை. ஓ பிராமணசிரேஷ்டனே! பூர்வகற்பத்திலே புராதனமான இந்த பாஞ்சராத்திரத்தை நான் சொன்னேன். அநேகமனிதர்களிலே எவனுகில் இந்த பாஞ்சராத்திரத்தை கிரகிக்கிருனே அவன் கர்மநாச முண்டான பின்பு, எனக்கு பக்தனுய் என்னை யடைகிருன். அவனுக்கு வேதங்களும், பாஞ்சராத்திரமும் எப்பொழுதும் மனதிற் பிரதிபாதிக்கும். ஓ நாரதரே! வேறொரு வரத்தை உனக்குக் கொடுக்கிறேன்; கேட்பாயாக. சமஸ்த தர்மங்களையும் சொல்லா நிற்கின்றதும், அத்தியந்த துர்லபமானதுமான இந்த பாஞ்சராத்திரத்தை என்னுடைய அநுக்கிரகத்தாலே நீ யறியப் போகின்ருய். இதில் சமுசயமில்லை. ஓ நாரதரே! வேதம், பாஞ்சராத்திரம், பக்தி, யாகம், இவைகளாலே நானடையத்தகுந்தவனே தவிர மற்றொரு விதத்தாலே கோடியாந்தர வருஷமானுலும் நானடையத் தகுந்தவ னல்ல.

பிரம்மாண்ட புராணம்.

ఋగాద్యా భారతంచైవ పంచరాత్రమథాఖిలం ।
మూలరామాయణంచైవ పురాణంచైతదాత్మకం ॥
యేచానుయాయినస్తేషాం సర్వే తే చ సదాగమాః ।
దురాగమాస్తదన్యే యే తైర్న జ్ఞేయో జనార్దనః ॥

ருக்கு, யசுசு, சாமம், அதர்வணம் என்கிற வேதங்களும், சமஸ்தமான பாஞ்சராத்திரமும், வால்மீகி ராமாயணமும், இவற்றின் அர்த்தங்களைச்சொல்லுகிற புராணமும், இவைகளை யநுசரிக்கிற எல்லாக்கிரந்தங்களும் சத்சாஸ்திரங்களென்று சொல்லப்படுகின்றன. இவைகளுக்கு விரோதமான கிரந்தங்கள், துஷ்டசாஸ்திரங்களாகையால் அவைகளால் நாராயணன் அறியப்படுகிறதில்லை.

(வரும்)

ஸ்மிருதிஸாரப்பிரகரணம்.

சாதிகளின் பிரிவு.

(௫௨-ம் பக்கத் தொடர்.)

சங்கரோற்பன்ன ஜாதிகள்.

బ్రాహ్మణా దుగ్రకన్యాయా మావృతో నామజాయతే ।
ఆభీరోఽంబష్ఠ కన్యాయా మాయోగ వ్యాంతు ధిగ్వణః ॥

பிராமணனுக்கு உக்கிர கன்னிகையி னிடத்திற் பிறந்தவன் ஆவிருத்தனென்றும், அம்பஷ்ட கன்னிகையினிடத்திற் பிறந்தவன் ஆபீரனென்றும், ஆயோகவ கன்னிகையினிடத்திற் பிறந்தவன் திக்குவணனென்றும் சொல்லப்படுகின்றார்கள்.

ఆయోగవశ్చ క్షత్తాచ చండాల శ్చాధమో నృణామ్ ।
ప్రాతిలోమ్యేన జాయంతే శూద్రా దపశదా స్త్రయః ॥

சூத்திரனுக்கு வைசிய க்ஷத்திரிய பிராமணப்பெண்களிடத்தில் பிரதிலோமமாகப் பிறந்த ஆயோகவன், க்ஷத்தன், சண்டாளன் என்னு மூவரும் எந்த தர்மகாரியங்களுக்கும் தக்கவர்களல்ல.

వైశ్యా న్మాగధవై దేహౌ క్షత్రియా త్సూత ఏవతు ।
ప్రతీపమేతే జాయంతే పరేప్య పశదా స్త్రయః ॥

வைசியனுக்கு பிரதிலோமமாக க்ஷத்திரிய,பிராமணப் பெண்களிடத்திற் பிறந்த மாகதன், வைதேகன்; க்ஷத்திரியனுக்கு பிராம்மணப் பெண்களிடத்திற் பிறந்த சூதன் இவர்கள் பிதுரு காரியங்களைச் செய்யத் தகுந்தவர்களல்ல. அன்றியும் இம்மூவரும், (அபசதா)=நீசர்களென்றே சொல்லப்படுகின்றார்கள்.

జాతో నిషాదా చ్ఛూద్రాయాం జాత్యాభవతి పుల్కసః ।
శూద్రా జ్జాతో నిషాద్యాంతు సవై కుక్కుటకః స్మృతః ॥

நிஷாதனுக்கு சூத்திரஸ்திரீயினிடத்திற் புஷ்கலனும், சூத்திரனுக்கு நிஷாத ஸ்திரீயினிடத்திற் குக்குடனும் பிறக்கின்றார்கள்.

క్షత్తుర్జాత స్తథోగ్రాయాం శ్వపాక ఇతి కీర్త్యతే ।
వైదేహకేన త్వంబష్ఠ్యా ముత్పన్నో వేణ ఉచ్యతే ॥

க்ஷத்தனுக்கு உக்கிர கன்னிகையி னிடத்திற் சுபாகனும், வைதேகனுக்கு அம்பஷ்ட கன்னிகையினிடத்தில் வேணனும் பிறக்கின்றார்கள்.

விராத்திய ஜாதிகள்.

ద్విజాతయ స్సవర్ణాసు జనయంత్య వ్రతాం స్తుయాన్ ।
తాన్ సావిత్రీ పరిభ్రష్టాన్ వ్రాత్యానితి వినిర్దిశేత్ ॥

பிராமணர்களுக்குத் தஞ்சாதிப் பெண்களிடத்திற் பிறந்த புத்திரர்களுக்கு விதிப்படி காலக்கிரமத்தில் உபநயனமுதலிய சமஸ்காரங்கள் செய்யப்படாமற்போவதினால், அவர்கள் காயத்திரியில்லாதவர்களாயும், கருமபிரஷ்டர்களாயும், விராத்தியர்களாய் ஏற்படுகிறார்கள்.

వ్రాత్యాంత్తు జాయతే విప్రాత్పాపాత్మా భూర్జ కంటకః ।
ఆవంత్య వాటధానౌచ పుష్పధ శ్శైఖ ఏవచ ॥

விராத்திய பிராமணனுக்கு அப்படிப்பட்ட பிராம்மணப் பெண்களிடத்திற் பாபியான பூர்ஜகண்டகன் பிறக்கின்றான். அவனுக்கு ஆவந்தியன், வாடதானன், புஷ்டதன், சைகன் என்று அவ்வத் தேசங்களில் வெவ்வேறு நாமங்களுண்டு.

ఝల్లో మల్లశ్చ రాజన్యా ద్వ్రాత్యా న్నిచ్ఛివిరేవచ ।
నటశ్చ కరణశ్చైవ ఖసో ద్రవిడ ఏవచ ॥

விராத்திய க்ஷத்திரியனுக்கு அப்படிப்பட்ட க்ஷத்திரியப் பெண்களிடத்திற் சல்லன்பிறக்கின்றான். அவனுக்கு மல்லன், நிச்சிவி, நடன், கரணன், கசன், திரவிடன் என்று அந்தந்தத்தேசங்களில் வெவ்வேறு நாமங்களுண்டு.

వైశ్యాత్తు జాయతే వ్రాత్యా త్సుధన్వాచార్య ఏవచ ।
కారూశశ్చ విజన్మాచ మైత్రస్సాత్వత ఏవచ ॥

விராத்திய வைசியனுக்கு அப்படிப்பட்ட வைசியப்பெண்ணினிடத்திற் சுதந்துவன் பிறக்கின்றான். அவனுக்கு ஆசாரி, காருசன், விஜன்மா, மைத்திரன், சாத்துவதன் என்று அவ்வத் தேசங்களில் வெவ்வேறு நாமங்களுண்டு.

వ్యభిచారేణ వర్ణానా మవేద్యా వేదనేనచ ।
స్వకర్మణాంచ త్యాగేన జాయంతే వర్ణసంకరాః ॥

நான்கு வர்ணங்களிலும், வியபிசாரதோஷத்தினாற்றெரியாமல், தன்கோத்திரத்திலேயே கன்னிகையை விவாகஞ்செய்துக் கொள்ளுகின்றமையாலும், சாதகர்மம் முதலான கர்மங்களைச் செய்துகொள்ளாமல் இருக்கின்றமையாலும் சங்கர ஜாதிகள் உண்டாகின்றன.

(வரும்.)

இதிகாசபுராணப்பிரகரணம்.

யசுர்வேத சாகைகள்.

(விஷ்ணுபுராணத்திலிருந் தெடுத்தது.)

யசுர்வேத விருட்சத்துக்குப் பிரதானமான இருபத்தேழு சாகைகளை வைசம்பாயன மகாமுனிவர்செய்து தஞ்சிஷ்யரனேகருக்குப் பிரசாதித்தார். அவர்களும் கிரமப்படி ஓதிவந்தார்கள். அந்த வைசம்பாயன மகாமுனிக்கு பிரமராததருடைய குமாரரான யாக்கியவல்கியர் என்கிறவர் சிஷ்யராயிருந்தார். அவர் முக்கியமான தருமங்களையெல்லாம் அறிந்தவராய் எப்போதும்குருவுக்குப் பணிவிடை செய்துகொண்டுவந்தார். முன்பொருகால் மகாமேருவிலே ரிஷிகளெல்லாரும் கூடித் தம்முடைய சபைக்கு எந்த ரிஷி இன்று வராமற்போவரோ அவருக்கு ஏழுதினங்களுக்குள்ளாக பிரமஹத்தி தோஷம் வரக்கடவதென்று ஒருசாபமுண்டாக்கி யிருந்தார்கள். அந்த ஏற்பாட்டை இந்த வைசம்பாயன மகாமுனியொருவர் கடந்திருந்தார். அதனாலே அவருக்கு அந்தத் தோஷம் சம்பவித்தது. எப்படியென்றால், ஒருநாள் அந்த வைசம்பாயனர் தம்முடன் பிறந்தாள் புத்திரனான பாலகனொருவனை காலினாலே தீண்டின மாத்திரத்திலே அந்தப் பாலகன் மரணமடைந்தான். அதனாலே பிரமஹத்தி சம்பவித்தது. அப்போது வைசம்பாயனர் தனு சீஷர்களைநோக்கி, ஓ சீஷர்களே! எனக்காக நீங்கள் பிரமஹத்தி நீங்கும்படியான விரதத்தைச் செய்யுங்கள், வேறொன்றும் நினையாதேயுங்கள் என்று நியமித்தார். அப்போது யாக்கியவல்கியர் குருவை நோக்கி ஆசாரியரே! அற்பதேஜசு உள்ளவர்களான இவர்களை ஏன் வருத்தவேண்டும், அடியேன் ஒருவனே அந்த விரதத்தைச் செய்கிறேன் என்று சொல்ல, குருவானவர் கோபமடைந்து யாக்கியவல்கியரைப்பார்த்து, நீ பிராமணரை அவமானம்பண்ணினாய், இப்படிப்பட்ட நீ எனக்குச் சிஷ்யனாயிருக்கத்தகாது. ஆகையால் என்னிடத்தில் ஓதினவேதங்களை விட்டுவிடு, உத்தமமான பிராமணர்களை நீ தேஜசு இல்லாதவர்கள் என்று சொன்னாய், இப்படிப்பட்ட சிஷ்யன் எனக்கிருந்தாவதென்ன? அன்றியும் என் ஆக்கினையையும் பங்கப்படுத்தினாய், ஆதலால் வேதங்களை விட்டுவிடு என்று உருத்துச் சொல்லக் கேட்டு, அவ் யாக்கியவல்கியரும், ஓ ஆசாரியரே! தேவரீரிடத்தில் பக்தியினாலே இப்படிச்சொன்னேனேயல்லது வேறில்லை, அப்படியிருக்கக் கோபித்துக்கொள்கிற உம்மாலேயும் எனக்கு ஆகவேண்டுவதில்லை, உம்மிடத்தில் ஓதின வேதமும் எனக்கு வேண்டாம் என்று சொல்லி உதிரத்தினால் பூசப்பட்ட ரூபமுள்ளவைகளாய்க் காணப்பட்ட யசுர்வேதங்களைக் கக்கிப்போட்டு, இதோ உமது வேதத்தை உமக்குக் கொடுத்தேனென்று சொல்லிவிட்டுத் தம்முடைய மனதின்படி போய்விட்டார். பின்பு யாக்கியவல்கியர் கக்கிப்போட்ட வேதங்களை மற்றுமுள்ள பிராமணர் நேராக இக்கக்கலையுண்பது தகுதியன்றென்று நினைத்துத் தித்திரி யென்கிற பட்சிகளாகி யுண்டார்கள். ஆதலால் அவர்களுக்குத் தைத்திரீயர் என்று பெயர் வந்தது. அந்த யசுர்களுக்குத்தான் தைத்திரீயசாகை யென்றுபெயர். அந்த வைசம்பாயன சிஷ்யர்களெல்லாம் குருவினாலே கட்டளையிடப்பட்டபடி பிரமஹத்தி திரும்படியான விரதத்தை யாசரித்து அத்துவர்யு காரியஞ் செய்துவந்தார்கள். அதனால் அவர்களுக்குச் சரணாத்துவர்யுக்கள்என்கிற பெயர் வழங்கிற்று.

அந்த யாக்கியவல்கியரோ சூரியபகவானிடத்தில் யசுசுகளைக் கிரகிக்கவேண்டி பிராணாயாம பராயணராய்ச் சூரியபகவானை நமஸ்கரித்துத் துதித்தார். எப்படியெனின், மோக்ஷத்திற்கு வழியாயும் அளவற்ற தேஜசு உள்ளவராயும் ருக்கு யசுசாமங்களின் ரூபமாயும் இந்தவேதமயமான பிரகாசமுள்ளவராயும் இருக்கிற சூரிய பகவானுக்கு நமஸ்கரிக்கிறேன். வெயிலுக்கும் மழைக்கும் ஏதுவாகையாலே அக்கினி சோமரூபியாயும் ஆதலால் உலகத்துக்குக் காரணமாயும் வெளிச்சத்தைச் செய்பவராயும் அமிருத ஹேதுவான காந்தியைப் பரிக்கிறவராயு மிருக்கிறவருக்குத் தெண்டனிடுகிறேன். கலை, காஷ்டை, நிமிஷம் முதலான காலங்களை யறிவிக்குஞ்சொரூப முடையவராயும் தியானிக்கத் தக்கவராயும் பிரணவரூபியாயும் பிரபஞ்சரூபியாயுமிருக்கிறவருக்கு வந்தனஞ் செய்கிறேன். தன்கிரணங்களினாலே சந்திரனைப் போஷித்துத் தேவதைகளையும் ஸ்வதாமிர்தத்தினாலே பிதுர்க்களையும் ரக்ஷித்து வருகிற திருப்தி ரூபமானவர்க்கு நமஸ்காரஞ்செய்கிறேன். பனி, வெப்பம், மழை இவைகளை யுண்டாக்கிறவராயும் ஹரிக்கிறவராயும் மூன்று காலங்களின் சொரூபியாயுமிருக்கிற சூரியபகவானுக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறேன். இவ்வுலகத்தின் இருளைப்போக்கி ஜகத்துக்கெல்லாம் அதிபதியாயும் சத்துவகுண சரீரமுள்ளவராயுமிருக்கிற ஆதித்த பகவானுக்கு நமஸ்காரங்கள் செய்கிறேன். எந்தத் தேவன் உதயமாகாமற்

போனல் ஜனங்கள் சத்கருமங்கள்செய்ய யோக்கியராகமாட்டார்களோ, தண்ணீரும் சுத்திஹேதுவாகமாட்டாதோ, அப்படிப்பட்ட சூரியதேவனைத் தொழுகிறேன். எந்ததேவனுடைய கிரணங்களினலே பரிசிக்கப்பட்டு மனிதன் சத்காரியங்களுக்கு யோக்கியனுகிருனே, அப்படிப்பட்ட சுத்திகாரணமான தேவனைத் தொழுகிறேன். பிரேரகனும் உற்பத்திசெய்பவனும் அந்தகாரத்தைப் போக்குகிறவனுயு மிருக்கிற தேவனுக்கு வந்தனம். தேவர்களுக் கெல்லாம் ஆதியாயிருக்கிற ஆதித்தபகவானுக்கு அனேகந்தரம் வந்தனஞ்செய்கிறேன். எந்தத்தேவனுடைய ரதமானது இதமும் ரமணீயமுமான தேஜோமயமாயிருக்கின்றதோ, குதிரைகள் ஞானரூபங்களாயும் அமிர்தங்களாயு மிருந்து, அந்த ரதத்தை வகிக்கின்றனவோ, உலகங்களுக்கெல்லாம் பிரகாசமான கண்ணுயிருக்கிற அந்த பகவானைப் பணிந்து தொழுகிறேன். *

என்றிப்படி ஸ்தோத்திரஞ்செய்யவே, அந்தச் சூரியபகவான் குதிரைவடிவாக அவருக்குப் பிரத்தியட்சமாகிவந்து, ஓ முனிவரோ உமக்குவேண்டும் வரத்தைக்கேளும் என்று கட்டளையிட்டார். யாக்கியவல்கிய முனிவரும் அந்தச் சூரியனைத் தொழுது, சுவாமீ! என்குருவான வைசம்பாயன மகாமுனிக்குத்தெரியாத யஜுர்வேதங்களை எனக்குப் பிரசாதித் தருளவேண்டுமென்று பிரார்த்தார். அவ்வாதித்தியதேவன், அம்முனிவர் பிரார்த்தித்தபடி (வியாசோபதேசமில்லாமையாலே) வைசம்பாயனர்க்குத் தெரியாதவைகளான அயாதயாமங்கள்என்கிற யஜுஸுகளைப்பிரசாதித்தான். அந்தச் சாகைகளை அத்தியயனஞ் செய்தவர்களுக்கு வாஜிகள் அல்லது வாஜசனேயர் என்று பெயர் வழங்கும். ஏனெனில் சூரியன் (வாஜி) குதிரை வடிவத்தோடு அந்த யசுர்வேதங்களையுபதேசித்தா ஞதலாலென்றறியும். அந்த வாஜசனேய சங்கிதையை யாக்கியவல்கிய மகாமுனி காண்வசாகை முதலான பதினைந்து சாகைகளாகப் பிரித்தார். யசுர்வேதத்தின் பிரிவுகள் இப்படி யேற்பட்டன.

* ధ్యేయ స్సదా సవితృ మండల మధ్య వర్తీ ।
నారాయణ స్సరసిజాసన సన్నివిష్టః ॥
కేయూరవాన్ మకరమండలవాన్ కిరీటీహారీ ।
హిరణ్మయ వపు ధృత శంఖచక్రః ॥

என்கிற சுருதிப்படி, சூரியமண்டலத்தில் அந்தராத்துமாவாய் வர்த்திக்கும் ஸ்ரீமந்நாராயணனை யாக்கியவல்கியர் தியானித்தனரென்றறிக.

ஆரியமதசித்தாந்தப் பிரகரணம்.

விசிஷ்டாத்துவைதம்.

(ருசு-ம் பக்கத் தொடர்.)

சித்து, அசித்து, ஈச்சுவரமென்னும் தத்துவங்கள் வெவ்வேருக விருக்கின்றனவென்று யதார்த்தத்தைக் கொண்டு சொல்லும்போது, அஞ்ஞானம், அன்னியதாஞானம், விபரீதஞானங்களுக்கு இருப்பிடமான ஜீவர்கள், தமக்குக் கர்த்தாவான ஈச்சுவரனுடைய இஷ்டம்போல நடந்து முக்தியை யடைவதற்குச் சாதனங்களாயிருக்கும் கர்ம, பக்தி, யோகாதிகளை அனுஷ்டிப்பதற்குக் கஷ்டமா யிருப்பதினலே பேததரிசனம் பயத்தை யுண்டாக்குவதாய்க் கூறுவார்கள். "యోऽన్యథా సంతమాత్మాన మన్యథా ప్రతిపద్యతే । కిం తేన కృతంపాపం చోరేణాత్మాపహారిణా" என்கிறபடி அவர்கள் சம்சாரஹேதுவான ஆத்மாபகாரமுடைய அபேத தரிசனத்தை விசுவசித்து, "స్వాతంత్ర్యం నరకంచైవ స్వాతంత్ర్యం జన్మసంభవః । పారతంత్ర్యంచ యోగినాం పరమానందవైభవం" என்றிருக்கும் வசனங்களை நிராகரித்து ஆத்மாபஹாரதோஷத்தை சம்பாதித்து, "ఈశ్వరోऽహమహం భోగీ సిద్ధోऽహం బలవాన్సుఖీ । ఆఢ్యోऽస్మిజనవానస్మి కోऽన్యోऽస్తి సదృశో మయా" என்று கூறுகிறபடி, கெட்ட சுவாதந்திரியத்திற்குள்ளாய் "மோக்ஷத்திற்குப் போக முதலை எடுத்துப்போனது" என்பதைப்போல, ரூபநாசத்திற்குக் கதி வருவதை யோசிக்காமல்போவ தாச்சரியமாய்க் காணப்படுகின்றது. "యస్య పృథివీ శరీరం, యస్యాత్మా శరీరం" "జగత్సర్వం శరీరం తే" எனும் சுருதிகள் பரமான்மாவினுடைய அந்தர்வ்யாப்தியைக் கூறுகிற்க, ஈச்சுவரனுக்கு வேறே ஆத்மா வில்லையென்று சொல்வ தெப்படி? விஷ்ணு சப்தத்தால் தெரியப்படுகின்ற சர்வவியாபகத்துவத்தை விசாரித்தாலும், ஈச்சுவரன் சித்து அசித்துக்களில் அந்தரியாமியா யிருப்பது ஐயமறச் சொல்லத்தகுந்ததா யிருக்கின்றதல்லவா? சித்து, அசித்துக்கள் பொய் யென்று சொல்லும்போது, "మమైవాంశో జీవలోకే" என்று ஈச்சுவரன் ஜீவர்களை தன்னம்சமா யெப்படி சொல்லக்கூடும். ஈச்சுவராமிசங்கள் மித்தியா சொரூபங்களாகுமா? ஜீவன் நித்தியனன்றி, மித்தியா சொரூபனு யிருந்தால் இந்த வாக்கியம் பகவான் சொல்லுவானு? சொன்னாலும் பயனென்ன? ஒருபோது பிரம்மத்தி

னுடைய கண்டங்களை ஜீவர்களென்கிறார்களா? அப்படியானால் ஜீவர்கள் மித்தியா சொரூபிகளே ஆகமாட்டார்கள். இதுவுமன்றி அப்படி பிரம்மம் கண்டிக்கப்படுவதற்கு எந்தபாவஞ் செய்ததென்றும், அப்படி பிரம்மத்தைக் கண்டித்தவர்களெவரென்றும், பிரம்ம மிவ்விதவிகாரங்கட்குட்படுமாவென்றும், பிரம்மம் தனக்குத்தானே பேதித்துக் கொள்ளுமாவென்றும் சங்கிக்க வருமல்லவா? ஜீவான்மா, பரமான்மாக்களுக்கு விவகாரத்தில் பேதமேயன்றி, விவகாரமில்லாதபோது ஏகத்வமே சித்தமா யிருப்பதினாலே, "[illegible]" என்று சொல்லப்பட்டதென்றால், வெள்ளியென்றும், பொன்னென்றும், விவகாரத்தில் பேதமாய் காணப்பட்ட உலோகங்கள் எவ்வளவு ஆபரணங்களாய்ச்செய்தபோதிலும், எப்போதும் அதின் சொரூபங்கள் மாறாது. கடைசியில் அந்த இரண்டு உலோகங்கள் ஒன்றாயுருக்கி ஒருஉருண்டையாக வார்த்தாலும், அந்த உருண்டையைப் பார்த்து அவிவேகியானவன் மாத்திரம் ஒரே உலோகமென்று பிராந்திகொள்ளுவானேயல்லது, விவேகியாகியரசவாதியைப்போன்றவன் திராவகங்களைவிட்டு எந்த உலோகத்தையும் அந்தந்தலோகமாய்பிரத்தியேகித்து, அது வெவ்வேறு லோகங்களாகத் தெரிந்துகொண்டதைப்போலும், தத்வவித்துக்கள்சரீரிசரீரங்களுக்குண்டானபேதங்களைத் தெரிந்துகொண்டதைப்போலும், ஜீவேச்சுவரர்களுக்குஉண்டான பேதம் பிரம்மவித்துக்களறிவார்கள். சாஸ்திரத்தில் விஷயங்களை யோசிக்குமவர்களுக்கு ‘மமைவாம்ச’ என்று சொன்னதற்கு, ஜீவர்கள் என் சரீரபூதங்களென்றாவது, என்சேஷபூதர்களென்றாவது சொன்னதாக அர்த்தஞ்செய்வதே யுக்தம். வெள்ளி, பொன், இரண்டும் லோகங்களே யென்று சொல்லப்பட்டதைப்போல, ஜீவான்மா பரமான்மாக்கள் ஞானசொரூபிகளே ஆவார்கள். அன்றியும், ஈச்சுவரன் நிரங்குச சுவாதந்திரியமுடைய ஞானசொரூபனும், ஜீவன் பகவத்சேஷத்வ பாரதந்திரியாதி குணங்களுடன் கூடிய ஞானசொரூபனு மாகின்றான். ஒரே ஜாதியான ஜீவகோடிகளுக்கே நெற்கூட்டம்போல, ஏகத்துவம் சம்பவிக்காமலிருக்கும்போது, ஜீவேச்சுவரர்களுக்கு ஏகத்துவம் கற்பிப்பது முயற்கொம்பு முளைப்பித்ததைப்போலே யிருக்கும். ஜீவனுக்குடைய அவித்யோபாதியும், ஈச்சுவரனுக்குடைய மாயோபாதியும் தொலைந்தபோது கடதடாக ஜலங்களைப்போலே, பிரம்மத்தில் ஐக்கியமாகுவரென்று விசாரணையற்ற தசையில் சொல்லவருமே யல்லது, ஜீவேச்சுவரர்கள் ஒன்றா யிருக்கும்போது அவனுக்கு உடாதிகளெப்படியுண்டாயின வென்றும், தனக்கு உண்டான உபாதியை நிவர்த்தித்துக் கொள்ளாத ஈச்சுவரன் சிவனோபாதி எப்படி நிவர்த்திக்கக் கற்பானென்றும், சமானாதிக தரித்திரனான பரமான்மாவிற்கே உபாதிகளுண்டானால், அதைத்தொலைப்பவர் யாரென்றும், விசாரணை யுண்டானபோது அப்படிக்கூறுவதற்கு சரிப்படாதாகையால், பிரம்மம் சித்து அசித்து விலக்ஷணமென்றே தெளியவேண்டியதா யிருக்கின்றது. பரமான்மா சர்வசக்திமானாகையால் இஷ்டமான திருமேனிகள் தரித்து சேதனர்களுடன் இஷ்டமானபடி கிரீடிப்பானென்பதற்குச் சந்தேகமில்லை.

(வரும்.)

ஆசங்கை நிராகரணம்.

பத்திராதிபரே! “வைஷ்ணவமதத்தைப்பற்றிய சில ஆசங்கைகள்” என்னும் பெயரைத் தந்து, தங்கள் பத்திரிகை 25-ம் பக்கத்தில் பிரசுரஞ்செய்ததைக் கண்டோம். அது வெறும்யுக்தியைக்கொண்டு நிரப்பி யிருக்கின்றதே யல்லாமல், சாஸ்திரங்களுக் கொத்ததா யில்லை. அதை யெழுதினோர் சுருதியுக்தி யநுபவத்திற்கு விரோதமில்லாமல் விடை கேட்கிறாரே யன்றி, தானொரு சுருதி யுக்தி யநுபவத்தோடு பிரமாணங்காட்டி எழுதினாரில்லை. அன்றியும், அதில் அவர் 24-வினாக்களை விரித்தனர். நாம் அதற்கெல்லாம் சுருதி யுக்தி யநுபவத்தோடு விடைகூறின் பெருகும். ஆகையால் அவரிஷ்டப்படி அதனதன் பிரமாண சாரங்களை யெடுத்து “ஆயிரங்காக்கைக்கு ஓர் கல்” என்னும் நியாயாநுசாரம் விடை எழுதுவோமாக.

நாராயணன் என்னும் பதத்தின் அர்த்தத்தை நோக்குழி, நாரா: என்னும் பதத்தில் சேதனங்கள் அசேதனங்கள் என்கிற இரண்டுவித பதார்த்தங்களுக்கு அயனம்=ஆதாரமாயிருப்பவன் என்பதால், அசேதனரூபமான பிரகிருதி பேதமாகவே யிருக்கிறது. விஷ்ணு என்கிற பதத்திற்கு வியாபகன் என்னும் பொருள் தருதலாலும், அப்பிரகிருதியி னுள்ளும் புறம்பும் வியாபித்து நிற்றலாலும், பிரகிருதிக்கு பேதமாகவே யிருக்கிறார். அப்படி பேதமா யிருப்பதெப்படியெனின், ஆகாயம் ஒன்றிலும் பற்றில்லாமல் வெளியாயிருப்பதுபோலும், அது பிருதிவி முதலிய வஸ்துக்களுள்ளும் வியாபித்திருப்பதுபோலுமாம். ஆகையினாலே “யஸ்யாத்ம

சரீரம், யஸ்யபிருதிவிசரீரம்" என்றும், "அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வியாப்ய நாராயணஸ்திதஃ" என்றுங் கூறுவதையும் நோக்குக.

இதனுலே, பிரகிருதி, விஷ்ணுவினிடத்திலேயுண்டாயிருக்கின்றதென்றும், உண்டாகிறதென்றுந் தெளிவாகும். ஆதலால் பிரகிருதி பண்பேயாகும். அது உலகத்தோற்றத்தால் தொழிலாகும். ஆகவே அது ஓர் பொருளே. இக்காரணங்களால், நாராயணன் சுவசாதி விசாதி சுவகதபேத முற்றவரோ. அவர் உலகு, உயிர்களை சரீரபூதமாகக் கொண்டு அகண்டரா யிருந்தும், அவருக்குள்ளேயே உலகும் உயிரு முண்டாகியொடுங்குகின்றதால் கண்டப் பொரு ளென்பதடாது.

இப்படி நாராயணன், விஷ்ணுமுதலிய திருநாமங்கள் யதார்த்தமே. அவதாரமுதலியவற்ருல் உலகை ரக்ஷிக்கின்ருர் என்பது லீலார்த்த மாகுமென்க. அவர் அவதாரஞ் செய்வது அவர் நிறைந்து பிரகாசிக்கப்பட்ட உலகு, உயிர்களிடத்திலேயாம். இதனுல் அவருக்கு வேருரு புடைபெயர்தலாகிய ஸ்தானம் வேண்டுவதில்லை. அனற்பொறிகள் சிந்துவதனுல், அனலுக்குத் தோஷ மெப்படி யில்லாமல் மேன்மேலுங் கொழுந்துவிட்டு அனலை சிந்திக்கொண்டிருக்குமோ அப்பொறிகளும் அனலாகி மாறி எப்படி யனலிற் சேருமோ, அப்படியே விகாரமடையாதிருப்பான். அன்றியும், உலகரக்ஷணையின்பொருட்டு தீபப்பிரதி தீபம்போலவும் அவதாரஞ்செய்வதால், நிர்விகாரம் விகாரப்படுவதில்லை. நாராயணன், நித்யவஸ்துக்களாகியும், தனக்குச் சரீர பூதங்களாயு முள்ள உலகு, உயிர் இவைகளி னுள்ளே அந்தரியாமியாய் நிறைந்த பூரணவஸ்து வாகையால், இவன் புடைபெயர்தலுமில்லை. சூரியன் இருப்புஸ்தானம் வேருயினும், அவன் ஒளியும் உஷ்ணமும் எங்கும்வியாபிப்பதினுல் சூரியன் புடைபெயர வில்லை யல்லவா? பூரணமென்பதற்கு அர்த்தம் தடித்துப் பெருத்து இருப்பதல்ல. காரணமான சிலந்திப் பூச்சியானது தன்னுடைய காரியமாகிய நூலை தானில்லாதவிடத்தில் விடுகின்றதினுல் பரிபூரணதோஷமுண்டென்பது அசங்கதம். அது இந்த உலகம் நாராயணனிடத்தில் தோன்றி யொடுங்குவதென்று காட்டும் பிரமாணமாகையால், அதை எல்லாவிஷயத்திற்கும் பிரமாணமாகக்கொள்ளக் கூடாது. ஆகையால், கடல் எப்படி விரிந்து பூரணமாய் நிறைந்திருந்தும், அது தன்னலைகளை யுண்டாக்கி அதைத்தானே யடக்கிக்கொள்வது போல, நாராயணனும் தன்னுள்ளடங்கிய உலகையும், உயிரையும் உருவகப்படுத்தி அவைகளைத்தானே யடக்கிக்கொள்ளுகிருன். இதனுல் கடல் வேருருவிடத்தை எப்படித்தேடவில்லையோ அப்படியே அவனியல்புமாகையால் பரிபூரணத்திற்கு ஓர் குறைவுமில்லை. சர்ப்பமானது தன்சர்மத்தை நீக்குவதுபோல் உலகை விடுகின்ருன் என்பதும் ஓர் பிரமாணம். இதனுல் அவன் கண்டப்படுகிருனே யென்பர். ஜலத்தைக் கண்டித்தாலும், வேருக்கினுலும், ஜலத்திற் சலம் சேருகின்றமையால் நாராயணன் எவ்விதத்திலும் கண்டப்படமாட்டான்.

சரீர சரீரிபாவ மில்லாத படியினுலே தண்ட சக்கரம் குலாலன் வெவ்வேருக விருக்கிருர்கள். நாராயணனுக்கும் சகத்துக்கும் சரீர சரீரிபாவ மிருப்பதினுலே மூன்றுகாரணமும் அவனேயாகின்ருன். சீவன் கிஞ்சிஞ்ஞனுகையால் அணுத்தன்மைப்பட்டு தேகத்தினிடத்தில் மாத்திரம் பிரகாசிக்கிருன். நாராயணன் விபுவாகையால் உள்ளும்புறம்பும் வியாபித்திருக்கின்ருன். ஆகையால், உலக பூரண னென்று சொல்லத் தடையில்லை. விஷ்ணு மனம் வாக்கு காயசுத்தி யில்லாதவருக்கு அகோசரரும், அவையுடையவருக்கு கோசரருமாயிருக்கிருர். ஆகையினுலே பிரம்மா சிருஷ்டிக்கப்பட்டு தன்னிலையையறியாது மயங்கி, தபசுசெய்து தியானித்து முக்கரணசுத்தியா யிருந்தபடியால் அனுதியாயிருந்த வேதத்தை அப்பிரம்மாவுக்கு கோசரப்பட்டு உபதேசித்தார். நாராயணர் எப்படி நித்தியனே அவன் சொரூபதர்மத்தைச் சொல்லும் வேதமும் நித்தியமே.

சீவர்கள் மூன்று குற்றம் நீங்கி முத்தியுறுங் காலத்தில் ஆனந்தமய சிற்சொரூபசிவத்துவமுற்றே யிருக்கின்ருர்கள். ஆகையாலே சீவர்களும் அனுதி. இவர்களடையும் ஸ்தானம் பிரகிருதிக்குமேற்பட்ட அப்பிராக்ருத ஸ்தானமாகிய வைகுண்டம்=முக்குற்றம் நீங்கின இடம். அதுவே பரமபதம். அந்தபதத்தில் நாராயணன் திரிவித குணங்களற்று, அக்குணுதீதமாகிய சுத்தசத்துவ குணத்தையுடையவர். இதனுல் அவர் சத்துவ மூர்த்தியாயினர். அச்சத்துவகுணமென்பது பிரகிருதி குணவர்ஜிதமாகும்.

இப்போது நாம் சுருக்கிவிடுத்த விடையினும் திருப்தியுருதுயாவராயினும் மேன்மேலும்வினுவுவரேல், அவர்கள் சுருதி யுக்தி யநுபவப் பிரமாணங்களோடு விடைதந்தாலன்றி பதிலெழுதோம் என்பது திண்ணம்.

ஓர் விசிஷ்டாத்துவைதி.

அத்வைதமதம்.

(௫௮-ம் பக்கத் தொடர்.)

இதுநிற்க, இப்பிர்ம்மத்தினிடம் சராசரப்பிரபஞ்சோற்பத்தி யெங்ஙனமெனிற் கூறுதும்:—

கல்லிற்காடின்னியமும், அக்கினியி லுஷ்ணமும், ஜலத்திற் சீதளமும் எங்ஙனம் அபின்னமானவைகளாக விருக்கின்றனவோ, அவைகட் கொப்பன இப்பிர்ம்மத்தினிடத்து அபின்னமா யிருக்கிற சக்தியொன்றுண்டு. இச்சக்தி அவ்வதீதபிர்மமத்தினிடத்தி லடங்கியிருக்கும்போது அதற்குச் சுத்த பிர்ம்மமென்று பெயர்; இச்சக்தி விசிரிம்பித்து அக்கினியிலுண்டாகுந் தூமம் எங்ஙனம் அக்கினியை மறைக்கிறதோ, தத்துல்யமாய், இச்சக்தி சுத்த பிர்ம்மத்தை வியாபிக்கும்போது, அப்பிரம்மம் சத்தியாகிய பரை வியாபகத்துள்ளிருந்தபடியால் அதற்குப் பரப்பிர்ம்மமென்று பெயர்; புருஷ சந்நிதானத்திலே ஸ்திரீக்கு இன்பம் ஜனித்தாற்போலப் பிர்ம்ம சந்நிதானத்தில் லக்ஷணசூந்யமாக விருக்கின்ற அந்த சத்தியினிடத்திலே, அவிகிர்த சத்வ ரஜஸ்தமோ குணங்களுண்டாயின; அந்த சுத்த சத்துவத்துக்கு ஆனந்தரூப சத்தியென்று பெயர்; சுத்த ரஜசுக்குச் சித்ரூபசத்தியென்று பெயர்; சுத்த தமசுக்குச் சத்ரூபசத்தியென்று பெயர்; அப்பரப்பிர்ம்மம் காரணமான ஆனந்தரூப சத்தியுடனே கூடி ஸர்வானந்த மென்னும் சுழுப்தியை யடையும்போது அதற்குப்பரமானந்த னென்று பெயராம்; அந்தப் பரமானந்தன் சித்ரூபசத்தியுடனே கூடி சர்வப்பிரகாசமென்னும் சொப்னவஸ்தை யடையும்போது அவர்க்குப்பரமானந்தனென்னும் பெயர்போய்ப் பரிபூரணனென்னும் பெயராம்; அந்தப் பரிபூரணன் சத்ரூப சத்தியுடனேகூடி சர்வவியாபகமென்னும் ஜாக்கிராவஸ்தையையடையும்போது அவருக்குப் பரிபூரணனென்னும் பெயர்போய்ப் பரனென்னும் பெயராம். இந்த அகண்ட பரிபூரண சச்சிதாநந்த பிர்ம்மத்தினிடத்திலே சுத்தியி லிரசதந்தோன்றினாற்போல மூலப்பிரகிருதியென்னு மொருசத்தியுண்டாயிற்று. அந்த மூலப்பிரகிருதி விகிருத சத்வரஜஸ் தமசுயென்னு முக்குணங்களுடனே கூடியிருக்கும்; அந்தப் பிரகிருதியின் சத்துவ குணத்திற்கு மாயையென்றும், சர்வஜன வுபாதியென்றும், ஈச்சுவரகாரணசரீரமென்றும்பெயர். அந்த மாயையினிடத்திலே நிர்மல ஜலப் பிரதிபிம்பம்போல பிரபஞ்சலக்ஷணமாகப் பிரதிபிம்பிக்கும். அந்தச் சைதன்ய பிரதிபிம்பத்துக்குச் சர்வக்ஞனாகிய ஈச்சுவரனென்றுபெயர். அந்த சத்துவகுண மாயையினிடத்திலே, சத்துவத்திற் சத்துவம், சத்துவத்தில் ரஜசு, சத்துவத்தில் தமசு என்று மூன்று குணங்களுண்டு. சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈச்சுவரனுக்கு ஜகத்தை ரக்ஷிக்கையினாலே விஷ்ணுவென்றுபெயராம்; சத்துவத்தில் ரஜசு பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈச்சுவரனுக்கு ஜகத்தை சிருஷ்டிக்கையினாலே பிர்ம்மனென்றுபெயராம்; சத்துவத்தில் தமசு பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈச்சுவரனுக்கு ஜகத்தைச் சம்மாரம் பண்ணுகையினால் ருத்திரனென்று பெயராம்.

மூலப்பிரகிருதியின் ரஜோகுணம் அநேகரூபமாய் ஒன்றிற்கொன்று தாரதம்மிய முள்ளவைகளாயிருக்கும். அவைகளுக்கு அவித்தையென்றும், ஜீவகாரணசரீரங்களென்றும்பெயர்; அந்த அவித்தைகளிடத்தில் மலினஜலப் பிரதிபிம்பம் போலப் பிர்ம்மசைதன்னியம் பிரதிபிம்பிக்கும்; அந்தச் சைதன்னிய பிரதிபிம்பங்களுக்குக் கிஞ்சிக்ஞரென்றும், சிதாபாச ஜீவரென்றும் பெயர். இந்த அவித்தைகளிடத்தில் ரஜசிற் சத்துவம், ரஜசில் ரஜசு, ரஜசில் தமசு என்னு மூன்றுகுணங்களுண்டு. ரஜசில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற் பிரதி பிம்பித்த சிதாபாசர் சத்துவஞான நிஷ்டராவர்; ரஜசில் ரஜசு பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் காமக்குரோத பரராய் கர்மநிஷ்டராவர்; ரஜசில் தமசு பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் சோம்பல் நித்திரை மயக்கங்களை யுடையவராவர். இவையே மூலப்பிரகிருதியின் ரஜோகுண கற்பனையாம். மூலப்பிரகிருதியின் தமோகுணத்தில் ஆவரணம், விக்ஷேபம் என்னும் இரண்டுசத்திகளுண்டு; அவ்விரண்டில் ஆவரணசத்தியானது தத்துவஞானிகளும், ஈச்சுவரனுந்தவிர மற்றஜீவர்களுக்கு சரீரத்திரயம், சிதாபாசன், சாக்ஷி சைதன்யம் என்பவைகளில் ஒன்றிற்கொன்று பேதந்தெரியவொட்டாமல் மறைத்துநிற்கும்; அதனால் மறைக்கப்பட்டிருப்பவன் இருபத்தொன்பது தத்துவங்களையும் நானென்று அபிமானிப்பன்; அந்த அபிமானத்திற்கு அகங்காரக்கிரந்தியென்றும், சம்சாரபந்தமென்றும் பெயர். சற்குரு கடாக்ஷத்தினால் அந்த ஆவரண நீங்கி இருபத்தொன்பது தத்துவங்களையும் தானன்றென்று அறிகிறதே முத்தி. இவையே ஆவரண சத்தியின் காரியமாம்.

விக்ஷேப சத்தியினிடத்திற் சப்த தன்மாத்திரையான ஆகாசந் தோன்றிற்று; ஆகாசத்தில் பரிச தன்மாத்திரையான வாயு தோன்றிற்று; வாயுவில் ரூபதன்மாத்திரையான அக்கினி தோன்றிற்று; அக்கினியில் ரசதன்மாத்திரையான அப்புதோன்றிற்று; அப்புவில் கந்ததன்மாத்திரையான பிருதிவி தோன்றிற்று. இந்த சூக்ஷ்ம பஞ்சபூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விக்ஷேபசத்தியினிடத்திலே தமசில் சத்துவம், தமசில் ரஜசு, தமசில் தமசு என்று முக்குணங்களு மடங்கியிருப்பதினாலே, அதன் காரியமான அந்த பஞ்சபூதங்களும் அம்முக்குணங்களுடனே தோன்றின. அந்த பஞ்சபூதங்களுக்குத் தன்மாத்திரைகளென்றும், அபஞ்சீகிருதபூதங்களென்றும், சூக்ஷ்மபூதங்களென்றும் பெயர். இவைகளிடத்தில் சூக்ஷ்ம சரீரங்களும், ஸ்தூல பூதங்களும் தோன்றும். எங்ஙனமெனின், ஆகாச முதலான பஞ்சபூதங்களின் சத்துவாம்சத்திலே ஒவ்வொரு பூதத்தி னொவ்வொரு மாத்திரைகள் ஒன்றாகச் சேர்ந்து அந்தக் கரண முண்டாயிற்று; அந்த அந்தக்கரணத்தில் ஆகாசத்தி னம்சங் கூடியதற் கடையாளம்:—அந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகல சப்தத்திற்கு மிடங்கொடுத்துத் திரிகின்றதேயாம்; அப்படித் திரிகின்ற விருத்திக்கு உள்ளமென்று பெயர்: அந்த அந்தக்கரணத்தில் வாயுவினம்சங்கூடியதற்கடையாளம்:—அந்த அந்தக்கரணமும் வாயுவைப்போலே யலைகின்றதேயாம்; அப்படி யலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர்: அந்த அந்தக்கரணத்தில் அக்கினியி னம்சங்கூடி யிருப்பதற் கடையாளம்:—அந்த அந்தக்கரணம் அக்கினியைப்போல இது விதுவென விளக்குவிக்கின்றதேயாம்; அப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தியென்று பெயர்: அந்த அந்தக்கரணத்தில் அப்புவி னம்சங்கூடியதற் கடையாளம்;—அந்த அந்தக்கரணம் அப்புவைப்போல விஷயங்களைப் பற்றிச் செல்லுகின்றதே யாம்; அப்படிச் செல்லுகின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர்: அந்த அந்தக்கரணத்திற் பிருதிவியி னம்சங் கூடியதற் கடையாளம்:—அந்த அந்தக்கரணம் பிருதிவியைப் போலக் கடினமாகி நின்று நானென்று அபிமானிக்கின்றதேயாம்; அந்த விருத்திக்கு அகங்கார மென்று பெயர்: அப்பஞ்சபூதங்களினுடைய சத்துவாம்சத்திலே ஒவ்வொரு பூதத்தின் ஒவ்வொரு மாத்திரைகள் தனித்தனியே சுரோத்திராதி ஞானேந்திரியங்களாயின. சுரோத்திரம் ஆகாசத்தி னம்சமானபடியினாலே ஆகாசத்தின் குணமான சப்தத்தை மாத்திரமறியும்; துவக்கு வாயுவினம்சமானபடியினாலே வாயுவின்குணமான பரிசத்தை மாத்திர மறியும்; சட்சு அக்கினியி னம்சமானபடியினாலே அக்கினியின் குணமான ரூபத்தை மாத்திர மறியும்; கிராணம் பிருதிவியி னம்சமானபடியினாலே பிருதிவியின் குணமான கந்தத்தை மாத்திர மறியும்; சிங்ஙுவை அப்புவி னம்சமானபடியினாலே அப்புவின் குணமான ரசத்தை மாத்திர மறியும். இப்படி இவைகள் ஒன்றுடனொன்று கூடாமல் தனித்தனி யுண்டாயிருக்கிற படியினாலே ஒன்று மற்றொன்றின் குணத்தை அறியமாட்டாது. அவ்வைந்து பூதங்களின் ஐந்துமாத்திரைகளும் ஒன்றாகக் கூடியது அந்தக்கரண மாதலால் ஐந்து இந்திரியங்களிலுஞ் சேர்ந்து ஐந்துவிஷயங்களையுமறியும். அந்தச் சத்துவகுணத்தி லுண்டான அந்தக்கரணமைந்தும, ஞானேந்திரிய மைந்தும் ஆகிய பத்தும் சத்துவாம்சமானபடியினாலே ஞானசாதனமாயின. இவ்வைந்து பூதங்களினுடைய ரஜோம்சத்திலே ஒவ்வொரு பூதத்தின் ஒவ்வொரு மாத்திரைகள் ஒன்றாகச் சேர்ந்து பஞ்சவாயுக்களுண்டாயின. இவையில் வியானவாயு ஆகாசத்தி னம்சமானபடியினாலே ஆகாசத்தைப்போல சர்வாங்கமும் வியாபித்திருக்கும்; பிராணவாயு வாயுவி னம்சமானபடியினாலே வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசிவளையிலுலையும்; அபானவாயு அக்கினியி னம்சமானபடியினாலே அக்கினியைப்போலச் சாடாராக்கினியாய் ஊஷ்ணத்தைச் செய்து குதத்தைப்பற்றி நின்று அன்னபானாதிகளைச் சீர்ணிப்பிக்கும்; சமானவாயு அப்புவி னம்சமானபடியினாலே சரீர நடுவான நாபிஸ்தானத்துநின்று அன்னபானாதிகளை சகல நாடிகளினும் அப்புவைப்போல இழுத்துக் கொண்டு செல்லும்; உதானவாயு பிருதிவியி னம்சமானபடியினாலே கண்டஸ்தானத்தி னின்று பிருதிவியைப்போல வுரத்துத் தரிக்கும், இந்தபஞ்சவாயுக்களுமல்லாமல் வாயிலிருந்து வாந்தி பண்ணுவிக்கின்றது நாகனென்றும், நேத்திரத்திலிருந்து விழிப்பிக்கின்றது கூர்மனென்றும், மூக்கிலிருந்துகுருகுருத்து தும்மச்செய்கின்றது கிரிகரனென்றும், கொட்டாவிகொள்ளச்செய்கின்றது தேவதத்தனென்றும், வீங்கச்செய்கின்றது தனஞ்செயனென்றும் சொல்லப்பட்ட ஐந்துவாயுக்களுண்டென்றும் சிலர்சொல்லுவார்கள். இவ்வைந்தும் பிராணவாயுவினுடைய தொழிலாயிருக்கின்றமையால், வேறல்லவென்றறிக.

(வரும்.)

பொதுப்பிரகரணம்.

விலைமாதர்விலக்கம்.

(௩௦-ம் பக்கத் தொடர்.)

ஓய் புத்தியுள்ள சத்தியவானே! ஒருவனுக்கு எம்பெருமான் சாக்ஷியின்முன் கொடுக்கப்பட்ட மனைவியானவள் இருந்தும், அவள் பரபுருஷனை இச்சித் திருப்பவளானால் அப்பரத்தையரினும் பதின்மடங்கு மேலான பாவியாய் யாவரும் நிந்திக்க யோக்கிய முடையவளென் றுணரவேண்டியது.

ஓய் அறிவுள்ள அன்பரே! இந்த வேசைகளுடைய வீடுகளெல்லாம் "விலைமாதர்வீடு, சவுளிக்கடை" என்று சொல்லிவருகிறபடி யாவரும் நுழைந் தெடுத்தெடுத்து நோக்குகின்ற சவுளிக்கடைகள். இவர்கள் சயனக் கிரகங்களோ யாவருங்கூடி வார்த்தையாடாநின்ற பொதுச்சபைக் கூடங்கள். அங்குள்ள பஞ்சணை மெத்தைகளோ யாவரும் வந் துட்காரும்படியான ஊருக்கு நடுவிலுள்ள பாறைக்கற்கள். அல்லது யாவருங்கூடி தண்டால் வாங்கும்படியான கிரடி கூடங்கள். இவர்கள் சரீரங்களோ எல்லோரும் நிர்த்தித்தேறி யிழியும்படியான நடவாவி நீர்த்துறைப்படிகள். இவர்கள் அல்குல்களோ சேர்ந்துள்ள யாவருமேறித் தள்ளிச் செல்லும்படியான காமகடலுக்குரிய ஓட்டை யோடங்கள். இவர்கள் முலைகளோ கடைத்தெருவில் வந்த யாவரும் எடுத்துப்பிசைந்து உருட்டிப்பார்த்துப்போடும்எலுமிச்சங்கனிகள். இவர்கள் வாய்களோ அங்குவந்துள்ள அனைவரும் காறியுமிழும்படியான படிகப்பாத்திரங்கள். இவர்கள் தொடைகளோ காணுகின்ற யாவரும் புகுந்து புகுந்து வெளியில் வராநின்ற காமநீர்ப்பந்தலில் கட்டியிருக்கின்ற வாழைமரங்கள். இவர்கள் கொங்கைகளை யடுத்திருக்கின்ற மார்புகளோ யாவரும் ஏறி யுலாவி சவாரிவிடும்படியான மோசக்கார நாசத்துக்குரிய வாடகைக் குதிரைகள். இவர்கள் இடைகளோ ஏறியிழியும் ஏணிப்படிகள். இவர்கள் காண்பிக்கின்ற ஆசைமோகப் புணர்ச்சிகளோ எல்லாராவியைத் தின்னும்படியான வழகிய எட்டிப்பழங்கள். இவர்கள் கொஞ்சிக் கொஞ்சிக் குலாவிச் சொல்லும்படியான உண்மைபோன்ற சத்திய வசனங்களோ முயலினது கொம்புகள். இவர்கள் நிதம்பஸ்தலங்களோ மேகராஜ சமூகங்களெல்லாம் அரசுவீற்றிருந்து வசிக்கும்படியான கிருமி கீடஜால பாதாள நரக கூபங்கள். இவர்களால் வருமின்பங்களோ கொல்லவென்று வெந்நீரிலிட்ட ஆமைகளின் களிப்பு.

வாரீர் நன்னெறிகொண்ட தன்னியரே! சில புருஷர்கள் இவ்வேசைகளைத் தங்கள்குலதெய்வமான எம்பெருமானென்றும், இவர்கள் தரிசன பரிசன வார்த்தைகளையே எம்பெருமானுடைய தரிசன பரிசன வார்த்தைகளென்றும், பேசிப்புகழ்ந்து களித்துக் கொண்டு, இவர்கள் பரம்பரையைச் சொல்லிக் குலாவுவதே குருபரம்பரைப் பிரபாவமென்கிறார்கள். இவர்கள் வஞ்சகமொழிகளே திருவாய்மொழி யென்றும், இவர்கள் அநுபவமே எம்பெருமானுடைய கல்யாணகுணானுபவமென்றும், இவர்கள் உபதேசமே திருமந்திரோபதேசமென்றும், இவர்கள் வீட்டின்வாசமே திவ்வியதேச வாசமென்றும், நம்பியிருக்கிறார்கள். அந்தோ! இவர்கள் மோச உல்லாச போக விபாகங்களைச் சொல்லிச் சேர்ப்பித்துக் கொண்டிருக்கும் சங்கமவாங்கிகளென்னும் அசத்துக்களான நாஸ்திகர்களோடுகூடி வசிப்பதே பாகவத சல்லாப நேசமென்றும் எண்ணிக்கொண்டு, அருமையான காலத்தைப் போக்கித் தாய்கள் நசித்துப்போவதுமன்றி, தங்கள் வீட்டிலுள்ளவர்களும் கெடும்படிக்குத் தங்கள் வீடுகளிலும் இந்தப்பரத்தையர்களை வரச்செய்து கெடுகிறார்கள். எவ்வாறென்னில், தங்கள்வீட்டாருக்கு நாகரீக புத்தி வரவேண்டு மென்று நினைத்து கற்புள்ள பத்தினிமார்களுக்கும், தாய், தங்கை, தம்பி, அண்ணன், புத்திரி, புத்திரன் முதலிய பேர்களுக்கும் வேசிகளது ஸாதுர்ய சுபாவங்கள் நன்றாகபழக்கஞ்செய்து வைக்கவேண்டுமென்று, தங்கள் நேயர்கள்முன், தாசிகளை நோக்கி நல்ல தாய்க்கூச்சமின்றி வேடிக்கையாய் ஓரடி, பச்சைப்பதங்களையும், தெம்மாங்குகளையும் நாணிநகைக்கும் பாட்டுகளையும், சிந்துகளையும் பலவிதத்துறைகளையும் பாடுங்களென்று கேட்டுக்கொள்ளுகிறார்கள். அவர்களும் "சொல்லப்பற்றாது கள்ளப்பரச்சிகளுக்கு" என்றபடி, அறிவற்ற புருஷர்களை மயக்கிப் பறிக்கத்தக்க ஜாலங்களும், கோலங்களும், கண்காட்டலும், புருவம் நெறித்தலும், கொஞ்சுதலும், அஞ்சுதலும், கோவித்தலும், பாவித்தலும், அழுதலும், தொழுதலும், ஆவலித்தலும், பாவலித்தலும், ஒயிலும், நடையும், நொடித்தலும், படித்தலும், மையலேற்றுதலும், கைகாட்டுதலுஞ் செய்கிறார்கள். மறுபடியும் அநேகபுருஷர்களுடையவும் பெண்களுடையவும் குறிகளின் உச்சமும், நிச்சமும், சமமும், லிங்கயோனிகளின் சும்பன தாடன ஆலிங்கன நகக்குறி பற்குறி விநோத விசித்திர சல்லாப

சரச ரதிகேளிகளும் நாணமற்று தெரிந்த மர்மங்
களை பொளிக்காமல் பாடிக்காட்டுகிறார்கள். அப்
போது இந்த புல்லாடவர்களை யொத்த இப்புரு
டர்கள் கேட்டு, உடல் மறந்து தங்கள் பத்தினிக
ளைப் பார்த்துத் தம் புத்திரியும் புத்திரனும் கே
ட்க வாராயடி பெண்ணே! நீ இவ்வளவு தெரிங்
திருக்கிறாயா? மட்டித்தன மன்றோ உன்செய்கை
களெல்லாம்; இனிமேலாவது இந்த மந்திமுகச்
சுந்தரமோகன வஞ்சிகள் முதலானாரை விட்டுக்
குவரச்செய்வேன்; நீ இவ்வாறு பழக்கிக்கொள்
ளென்று சொல்லி, அவ்வேசைகள் மனங்குளிர
ஆலிங்கித்துத்தொழுது "ஈயார்தேட்டைத்தியா
ர்கொள்வ" ரென்றபடி அவர்களுக்கு வேண்டிய
பணத்தைக் கொடுத்து, இப்படியன்றோ அநுப
வித்துக் காலம்போக்க வேண்டுமென்றுசொல்லி
அவர்களுக்கு அடிமைகளாய்த் திரிந்து காலத்
தைக் கழிக்கிறார்கள்.

ஓய் விகிதமான போகசகிதமும், அகிதமான
போக ரகித முள்ள உத்தமரோ! யாராவதொரு
அறிவுள்ளபுல்வர்கள் தயையுடையவர்களாய் இப்
படிக் கொத்த துர்க்காலக்ஷேப முள்ளவர்களை
யழைத்து, ஒ ஐயா! நீங்கள் தான் இப்படிக்கெட்
டாலும், ஐயோ! உங்கள் குடும்பத்தையும், இவ
ர்கள் சாவகாசத்தால் கெடுப்பது தகுதியன்றே;
எவர்கள் எதிற் பழகுகிறார்களோ அவர்க ளந்த
வாசனை முதிர்ச்சியால் அந்த தேகமே எடுத்து
அநுபவிக்கவருமே! இப்போதே இந்த ஜன்மத்
திலும் அந்த கொடிய பாப விருத்திக்குரிய செய்
கையே வந்துவிடுமே! என்று "கல்லாதமாந்தர்க்
குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்ற - மல்லாதமாந்
தர்க் க்றங்கூற்ற" மென்றவாக்கியத்துக்கும் அஞ்
சாமல் அவர்கள் செய்கையை யெடுத்துக் கூறி
னாலும் செவிடன்காது சங்காகிறதுமன்றி, ஓரா
சாரிய னோர் சிஷ்யனுக்குப் பிரேதயோனிப் பிர
ஜையின் பிரபாவஞ் சொன்ன இதிகாஸத்தையு
மொத்து எதிர் மறுக்கின்றது. "புல்லர்க்கு நல்
லோர்சொன்ன பொருளென போயிற்றன்றே"
என்ற ஞாயமும் ஒத்துள்ளது.

ஓய் அரிகதா சிரவணானந்த பரிதரானவரோ!
அந்த மாயாரூபிகளின் கரவட நாடகம் ஒருகண்
ணினால் அழுது ஒருவனை வழிவிடுவார்கள். ஒரு
கண்ணினால் ஒருவன் களித்திருக்க அணைப்பார்
கள். ஒருவருக்கோர் தனத்தால் சோர்வையும்
காட்டுவார்கள். ஓரிடத்தி லொருவனை யூரைவிட்
டோடவும், ஓரிடத்தி லொருவனை யூரில் வந்து
கூடவும் செய்வார்கள். ஓர்போதே ஒருவனுக்
குக் காய்ச்சலும், ஓர்போதே ஒருவனுக்குக் கா
மக்காய்ச்சலும் காட்டுவார்கள். ஓர்போதே யொ
ருவனுக்குத் தலையிடி, ஓர்போதே ஒருவனுக்கு
முலையிடி என்பார்கள். ஓர்போதே யொருவ
னுக்குத் தம்பலக்காக்ஷி, ஓர்போதே ஒருவனுக்கு
அம்பலக்காக்ஷியைக் காட்டுவார்கள்.

ஓய் நன்னடையுள்ள புண்ணியரோ! "புல்லு
விற்றுங்கீரை விற்றும் பொன்கொடுப்பார்கா ணம
க்குக்-கொல்லிமலைப்பாவாய்க் குலதெய்வ" மெ
ன்றபடி, காசிகொடுக்கும் ஈனனெல்லாம் அவர்
களுக்குக் கருணாகரப்பெருமான். "அப்பன்வரு
வா னதன்பின் மகன்வருவான்-தப்புமுறையென்
றுநீ தள்ளாதே" என்றபடி தகப்பனைப் புணர்
ந்து தம்பியைச்சேர்ந்து அண்ணனை யணைந்து
பிள்ளையைப்புணர்ந்து காமத்தைத்துய்த்துக் கா
சிலையவாங்குவதுதான் இவர்களுக்குமனு விக்ஞா
னேஸ்வராதி தருமசாஸ்திரமுறைமை. "பொய்
யாணையாற் சீவன் போகுதோ பாரெனக்குத்
தையலா லவ்வாணை தயிர்ச்சாதம்" என்றபடி,
எப்போதும் உம்மை வஞ்சிக்கிற தில்லை யென்று
தலையிலும் தீபத்திலும் அடித்து தெய்வமுதலி
யவைகளையும் நினைத்து சத்தியஞ் செய்வதே
இவர்களுக்கு அரிச்சந்தரோபாக்யான படனமா
ன போகபோக்ய போஜனம். "மறைக்கட்டளை
யார் வந்தாலுன்கைமருந்தாலே, யறிவைத்தட் ட
ழியப்பண்ணித் தனம்பறிநீ" என்றபடி ஆசார
முள்ள வேதபண்டிதரான பிராமணர் முதலியவ
ர்கள்வந் தகப்பட்டுக் கொண்டால் அவர்கள் கை
ப்பொருள் முழுதும் அபகரித்துக் கடைமக்க
ளாக்குவது இவர்களுக்குத் தவம். தங்கள் மூத்தி
ரத்திலும், நாறியமலத்திலும், வாயிலுள்ள ஊத்
தையிலும், சளியிலும், மாதவிடாயான ரக்தச்
சீலையிலும், எச்சிலிலும், காதுகுறும்பியிலும்,
அக்கிள் - துடை - முலைச்சந்து - குதம் - பகம்
ஆகிய பஞ்சஸ்தானங்களிலும் எடுத் துருட்டப்
பட்ட அழுக்கினாலும், கண்பீளையினாலும், இன்
னும் சில பித்துவகை வித்துவகை சரக்குவகை
தோல்மயிர் முதலானவைகளாலும் கூட்டிவைத்
திருக்கப்பட்ட புருஷ வசிய மென்கிறமருந் துண்
டைகளைச் சிற்றுண்டி, வெற்றிலை, பால் முதலிய
வைகளில் புகட்டிக்கொண்டு, மலர்மாலைவாசனைப்
பரிமளங்கள் ஆபரணங்கள் முதலியவும் அணிக்
தலங்கரித்துக்கொண்டு, மெழுகோடே கோழிமு
ட்டைகலந்து மஞ்சள் சேர்த்து முலை முகங்களை
மினிக்கிக்கொண்டு, பலவித பச்சையான பாட்டு
களையும் வசனங்களையும் கொஞ்சிச் சொல்லிக்
கொண்டு, கிண்ணமாற்றுத லென்கிற சடங்கின்
சமயத்தில் அப்புருஷனுக்கு மண்டை கொள்
ளும்படியான மையலேற்றத்தொடங்குகிறார்கள்.

(வரும்.)

நோயாளிகளை உபசரித்தல்.

நோயாளிகளுக்கு மருந்து, பத்தியம் முதலிப் பரிகாரங்கள் கொடுத்து, அவர்களைப் படுக்கை விட்டெழுப்ப, ஸ்திரீகளே புருஷர்களைவிட நல்ல தாதிகள். வைத்தியன்முதலியவர்களுக்குப் பணமுதலிய லாபம் கிடைப்பதுபோல, ஸ்திரீகளுக்கு லாபமொன்றுங் கிடைக்காவிட்டாலும் இவர்களே இவ்வேலையை மிக ஆவலோடு செய்பவர்கள். ஆனால் மிக்க ஆவலால் மாத்திரம் காரியம் ஆகிறது கடினம். ஆவலுடன் அறிவு, தேகபெலன், பட்சம், திடம், சுருசுருப்பு, பொறுமை இவைகள் கூடியிருந்தால் நலம். பின்னும், இவையெல்லாம் ஒருங்கே கூடியிருந்தும், ஒன்று மாத்திரம் ஸ்திரீகளுக்கு இருப்பது பிரயாசை; அதாவது தைரியம். இவ்விதத்தைரியம், போர்க்களத்தில் யுத்தவீரர் உடைத்தாயிருக்கும் வீரத்தன்மையைவிட உயர்ந்தது. இவ்வித குணதிசயங்கள் கூடிய ஒருதாதி யிருந்தால், அதனாலேயே பாதிநோய் தீர்ந்துவிட்டது - என்பார்கள் பெரியோர்.

“உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான் என்று, அப்பால் நாற்கூற்றே மருந்து” என்று திருவள்ளுவர் நோய்உற்றவன் அதைத் தீர்க்கும் வைத்தியன், அவன் பிரயோகிக்கும் மருந்து, பத்தியங்கொடுப்போன், என் இந்த நான்கு பகுப்பையுடையது மருந்து என்றனர்.

ஆகவே, இவ்விதம் ஓர் தாதிக்குச் சிறப்பாகும்.

ஏனெனில், இத்தன்மைய ஓர் பெண்ணால் வியாதிக்காரனுக்கு இன்னும் நமக்கென்ன குறை என்னும் சந்தோஷம் விளையும். வைத்தியனுக்கும் தன் ஏற்பாடுகளைக் கவனிக்கத்தகுந்த தாதியர் இருக்கிறாரே என்பது ஓர் நம்பிக்கையா யிருக்கும். ஆனால் இவ்வித உத்தமகுணங்களை கற்க யாதேனுமோர் வைத்திய வித்தியாசாலையிற் பழகினால்தான் கூடும். ஆகையால் அவ்விதம் பழகாத ஜனங்களே பெரும்பான்மை யாதலாலும், அவர்களே சமயாசமயங் கொண்டோ நேசங்கொண்டோ நோயாளிகளை உபசரிக்க வேண்டியிருக்கும். அவ்வித ஜனங்களுக்குப் பின்வரும் சில குறிப்புகள் உபயோகப்படுமென்று கருதி, இங்ஙனம் கூறுகின்றோம்:—

நோயாளிகள் இருக்குமிடங்களில் அமைதியாயிருக்கவேண்டிய தென்பது மிக அவசியம். அமைதி என்றால், சாதாரண நித்தியகருமங்களையும்விட்டு எல்லாவிதச்சத்தமும் ஒழிந்து இருப்பதல்ல. ஏனெனில், இதனால்நோயாளியின் அமைதிகெடாது. அவ்வமைதியுடைய காரணங்களாவன, (1) மிகஜாக்கிரதையுடன் விரலையூன்றியும், பெருவிரலின் நுனியின்மேலும் நடத்தல், (2) குசு குசு என்பேசல்; (நோயாளியின் நித்திரையறையில் மெள்ள=தாழ்ந்த வொலியுடன் மொழிதல் நலம்.) குசு குசு எனல்—நித்திரையைக் கெடுக்கும். (3) உஷ் கிஷ் என்றிரைதல்—இதுவுங் கொடிது. (4) அதிக சத்த முண்டாக்கத்தக்க உடுப்புகளை யணிந்துகொண்டு, படுக்கையறையில் நடத்தல்—விவேக மின்மை. (5) நோயாளியின் அறைக்குள் செல்லவேண்டுமானால் கூச்சமில்லாமலேசெல்லலாம்;—அவ்விதமல்லாமல், கதவைத்திறக்க ஒருநாழியும், எட்டிஎட்டிப் பார்த்தல் இரண்டு நாழியும், கதவுக்கு வெளியே மூனுநாழி மிணமிண வென்று பேசுதலும், இவை நோயாளிக்குத் துன்பமே ஒழிய வேறல்ல. ஏனெனில், இந்த 3, 4-நாழிகையும் நோயாளி கண்மூடிக்கொண்டிருந்தபோதிலும், அது நித்திரை செய்வதல்ல, தேக மெலிவினால் கண்களை மூடிக்கொண்டு மனதைக் கூர்மையாகச்செலுத்தி, சுற்றிலும் நடக்கும் செயல்களை கவனிப்பான்.

நோயாளியோடு பேசும்போது, அவன் கால்மாட்டில் நின்று பேசக்கூடாது. படுக்கையின் பக்கத்தில் தலையணைக்கருகே யிருந்து பேசல் கூடும். இப்படி யல்லாவிட்டால், நாம் நிற்கிறவிடத்தில் நோயாளிகள் கண்களைச் செலுத்த வேண்டியிருப்பதால், அவனுக்கு வருத்தங்கொடுத்தலாகும்.

தாதிகள் தங்களுக்குத் தூக்கம் வரும்போது, படுக்கைக்குப் போதல் சுகம்; அவ்விதமல்லாது, சிலர் தங்களுக்கு நோயாளிகளிடத்தி லிருக்கும் அன்பின் பெருக்கத்தாலோ, அல்லது அறிவின்மையாலோ நாழிகை முப்பதும் விழித்திருக்கிறார்கள். இதனால், தங்களுக்கு விளையுஞ் சுகவீனமுந்தவிர, தாங்கள் மிக ஜாக்கிரதையோடும் விழித்திருந்து பரிகாரமுதலிய செய்யவேண்டிய காலங்களில் தூங்கிவிழுந்தும், ஐயோ நமக்காக நம்மினியமனைவி தூக்கம் விழிக்கின்றாளே யென்று நோயாளியை ஏக்கமுறச்செய்தும் தங்கள் அறிவீனத்தை வெளியிடுகிறார்கள்.

சிலர் நோயாளிகளுக்குப் போசனத்தின்மேல் பிரியமுண்டாக்க அநேகவித உண்டிகளைச்செய்துக் கொடுப்பார்கள். இது வைத்தியசாஸ்திரத்திற்கு விரோதமாவது மன்றி நோயாளிகளின் மேல் அன்பிருந்தால், புத்தியுள்ளதாதிகள் செய்யாத விதமுமாம். சாதாரணமாய் வியாதி ஆரம்பத்திலே வியாதிக்காரர்களுக்கு எவ்வித்யோக்கி

யமான உணவானாலும் ருசிக்கிறதில்லை. அந்த காலத்தில் பசியை உண்டாக்க வேணுமென்று முயல்வதை விட வைத்தியன் உத்தரவு செய்த பத்தியங்களை வேணுமென்றே ருசிக்காதவிதஞ் செய்து நோயாளிக்குக் கொடுத்தல் மிகவும் நன்மையாகும். இதைவிட்டுதின்பண்டங்கள்அநேகவற்றை பெடுத்துவிரித்து இதுவேண்டுமா அது வேண்டுமாவென்று நோயாளியைத் தொந்தரை செய்தல் அறிவின்மையின் விளைவாய்த்தோன்றுகின்றது. மேலுமோ அந்நோயாளிக்குஏதேனும் வேண்டுமானால் தானே வேண்டிப் புசிப்பான், அவ்விதம் தான் வேண்டாததை நாம் பலாத்காரம்செய்புந் தொந்தரவை நீக்கிக்கொள்ளவேணுமென்று அப்பதார்த்தத்தைப் புசிக்கத் தலைப்படுவான். ஓர் நாள் ஓர் வைத்தியர் ஓர் நோயாளியண்டையிருக்கும்போது, அந்நோயாளிக்குப்பாத்தியமான ஒருஅம்மைஅங்குவந்தனளாம். அவ்வம்மையாரை, அம்மா! நீர் யாதொருதொந்தரவுஞ் செய்யக்கூடாது என்று அவர் சொல்ல, அவள் ஆம் என அமைந்து, உள்ளே நுழைந்தவுடன், நோயாளியைப்பார்த்து "அப்பா! சற்றுத் தலையைத் தூக்கட்டுமா? இன்னொரு திண்டு கொண்டுவரட்டுமா? தலை இன்னுஞ் சற்று உயர்ந்திருக்கவேண்டுமா? கொஞ்சம் விசிறட்டுமா? படுதாவைச்சற்றுத் தூக்கத்தான்வேணும்; இதோ கொஞ்சம் ரொட்டி கொண்டு வருகிறேன்; அதுதான் இந்த வேளைக்கு நல்லது; இன்னொரு தலையணை போட்டுக்கொண்டால் உத்தமம்; கொஞ்சம் காப்பி வேண்டுமா? ஐயோ! நீங்கள் கொஞ்சம்காப்பிசாப்பிட்டுப்பாருங்கள்? நிரம்பச் சுகமாயிருக்கும்?" என்று இவ்விதக் கேள்விகள் கொஞ்சமாகவே ஓர் இருபதுமுப்பது கேட்டுவிட்டாளாம். இவ்வித அன்பால் நெருங்கிய ஓர் மாது கொடுக்கும் துன்ப மிகவுங் கொடிது. ஆதலால் தான் பேதமையுடைய மாதரைவிட மனத்திண்மையும் பயிற்சியுங்கூடிய ஆண்மக்களே இந்தக்காரியங்களுக்கு நன்று என்கிறார்கள்.

வாந்திபேதியைத் தடுப்பதற்கு அனுஷ்டிக்கவேண்டிய விதிகள்.

சுத்தம்.

1. வீடு, வாசல், கொல்லை, முத்தம் இவைகளை அதிக சுத்தமாய் வைத்திரு.

2. அங்கணம், சாக்கடை முதலானதுகளை நித்தியம் தண்ணீர்விட்டு அலம்பி துர்நாற்றம் வீசாமற் செய்துகொள்.

3. குடி தண்ணீரை அதிகச் சுத்தமாய் வை.

4. வீட்டை வெள்ளை யடி, அதில் கெந்தகப் புகைபோட்டு சுத்தமாய் வை.

5. வெளியிற் போகுங்காலத்தில் தேகத்தில் உஷ்ணங்கொள்ளும்படியானதாய் பிளானல்,கனத்த துணி முதலியவைகளினாற்செய்த சுத்தமான உடுப்புகளைத் தரித்துக்கொள்; அல்லது கனத்த துணிகொண்டு நன்றாய்ப் போர்த்திக்கொள்.

6. உன்தேகத்தை எப்போதும் சுத்தமாய் வைத்திரு.

ஆகாரம்.

7. ஆகாரத்தை மட்டாய்ச் சாப்பிடு.

8. பசித்தாலொழியச் சாப்பிடாதே.

9. மந்திப்புக் கொள்ளும்படியான வாயுபதார்த்தங்கள், அழுகல், ஊசல் வஸ்துக்கள் முதலானதுகளைச் சாப்பிடாதே. மொத்தத்திற் பத்தியமாய்ச் சாப்பிடு.

10. கறி பதார்த்தங்களில் வழக்கத்துக் கதிகமாய் உப்பைச் சற்று தாராளமாய்ச் சேர்த்துச் சாப்பிடு.

11. புளித்த பழயதை இராத்திரியில் சாப்பிடாதே.

12. புளிப்பைக் கறிமுதலியதுகளில் அதிகமாய்ச் சேர்க்காதே.

13. தண்ணீரை வெந்நீர் வைத்துக் குளிரவைத்துச் சாப்பிடு. இங்கிலீஷ்காரர்மாதிரி வடிகட்டின ஜலமாயிருந்தாலொழியக் குளிர்ந்தஜலம் சாப்பிடாதே.

பொது விதிகள்.

14. வெந்நீரில் முழுகு. நித்தியவழக்கமிருந்தாலொழிய, குளிர்ந்த சலத்தில் ஸ்நானம் செய்யாதே.

15. கர்ப்பூரத்தை எப்போதும் வேஷ்டியில் முடிந்துவைத்துக்கொள்.

16. காதிற் பனிக்காற்று விழாமற் செய்துகொள்.

17. ஈரத்தில் படுக்காதே, நடமாடாதே, ஈரவஸ்திரங் கட்டாதே.

18. இராத்திரி அதிகநேரம் விழியாதே.

19. பசியோடு வழி நடவாதே.

20. இராத்திரிப் படுக்கையில் பிளானலினாலாவது, அல்லது துணியை மடித்து அதனாலாவது, உன்வயிற்றைச்சுற்றிக் கட்டிக்கொள். இது ஜீரணஸ்திக்கு மிகவும் அனுகூலம்.

(சுகுணபோதினி.)

திருக்குறள் தாற்பரியம்.
(கூச-ம் பக்கத் தொடர்.)

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது.

பொருள்.

தனக்கு=தனக்கு
உவமையில்லாதான்=நிகரில்லாதவனது
தாள்=திருவடிகளை
சேர்ந்தார்க்கல்லால்=சேர்ந்தவர்க்கல்லது
மனக்கவலை=நெஞ்சாற்றோன்றும் துன்பத்தை
மாற்றல்=நீக்குதல்
அரிது=உண்டாகாது.

தாற்பரியம்.

எவ்விதத்திலும் தனக்கு நிகரில்லாத கடவுளுடைய செந்தாமரைப் பாதங்களைச் சேராவிடின், பிறவிக்கு ஏதுவாகிய காம வெகுளி மயக்கங்களை நீக்கமாட்டாமல் பிறப்பிறப்புகளிற் பட்டுழலுந் துன்பம் பெருகு மென்பதாம்.

ஔவையார் நீதிவாக்கியம்.
(கூச-ம் பக்கத் தொடர்.)

செய்வினை திருந்தச்செய்.

பொருள்.

செய்வினை=நீ செய்த வினையை
திருந்த=செப்பமாய் நிறைவேற
செய்=(தொடர்ந்து) செய்.

கருத்து—நீ ஒரு காரியத்தை நிறைவேற்றாமல், இதனாலென்னபலனென் றிகழ்ந்துவிடுவையாகில், அது கெடுதியை விளைவிக்குமென்றறிக.

குறளுதாரணம்.

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற் றீயெச்சம் போலத் தெறும்.

பொருள்.

வினை=தொழிலும்
பகை=பகையும்
என்றிரண்டின்=என்கிற இரண்டினது
எச்சம்=குறையும்
நினையுங்கால்=ஆராயுமிடத்து
தியெச்சம்போல=தீயினதுகுறைபோல்
தெறும்=கெடுக்கும்.

கருத்து—செய்யத் தொடங்கிய காரியத்தையும், அழிக்கத்தொடங்கிய பகையையும், அரைகுறையாக விட்டுவைத்தால், அவை பெருநெருப்பை அவித்து சிறிதுவிட்டு வைப்பின், அது தீக்கொழுந்துவிட்டு யாவற்றையும் எரிப்பது போல கெடுக்கும் என்பதாம்.

கட்டுக்கதைகள்.

குழைநரியும், கொக்கும்.

ஒரு காலத்தில் ஒரு குழைநரி, ஒருகொக்கை விருந்துக் கழைத்து இனிப்புள்ள பண்டங்களை வட்டித்துவைத்திருந்தன. குழைநரி நாவாலெடுத்துண்ணத் தொடங்கி, தன்விருந்தாளியை நோக்கி உனக்கு முன்வைத்திருக்கும எல்லாப் பண்டங்களையுஞ் சாப்பிட உன்னை மனப்பூர்வமாய் வரவழைத்தேனென்று சொல்ல, கொக்கு தன்னை நரி ஏய்க்கப்பட்ட தென்றறிந்து, பின்பு செலவு பெற்றுக்கொண்டு தான் போகும்போது, பதிலுக்கு இன்றையதினம் ராத்திரி என்னோடு சாப்பிட வேண்டுமென்று தன்சிநேகிதனைக்கூப்பிட, நரி யதற்கு அநேகஞ் சாக்குகளைச் சொல்லியும், கொக்கு அம்மறுத்தலை யேற்றுக்கொள்ளாமையால், நரி சம்மதித்து வந்தது. நரிக்கு இரவிற்செய்த விருந்தில் இனிப்பான பண்டங்களைக் கொக்குவைத்துப் புசித்துக்கொண்டிருக்கும்போது, தன் சிநேகிதனை நோக்கி, நீ யுன் வீட்டிலிருப்பதுபோல் அவ்வளவு நாணமற்று மனப்பூர்வமாய்ச் சாப்பிடும்படி பிரார்த்திக்கிறேனென, நரி தான் முழுமையும் மோசம்போனதை உடனேகண்டு, தனக்குச் சரியாய்ச் செய்ததென்று மனதில் நினைத்துக்கொண்டு, தன்னாற் கூடியமட்டுந் துரிதமாய் நழுகி யோடிப்போய் விட்டது.

நீதி.

மோசக்காரர்களுக்குத் தங்களால் மோசம்போனவர்களாலேயே தாங்கள் மோசம் போவதை விட வேறொரு கொர்வபங்க மில்லை.

குழைநரியும், பதுமையும்.

ஒரு குழைநரி பதுமைசெய்பவன்கடைக்குட் சென்று, அவ்விடத்திலிருந்த எல்லா வஸ்துக்களுக்குள் நன்றாய் வேலைதீர்ந்திருந்த ஓர் முகரூப மாத்திரங் காட்டும் பதுமையைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, அதை மிகவுங்கவனமாய்ப் பரிசோதனைசெய்தபின், நல்லது நீ யுண்மையாகவே சவுந்தரியமுள்ள வேலைத்தனமான பதுமையா யிருந்தும், உனக்கறிவில்லாமலிருப்பது என்னபரிதாபமாயிருக்கிறதென்று சொல்லியது.

நீதி.

சவுந்தரியமுந் திருத்தமுமுள்ள முகரூபங்கள் எப்போதுந் திடமுஞ் சூக்ஷ்மமுமான புத்தியையுந்தெரிவிக்காவாம். ஒருவஸ்துவைவெளித்தோற்றங்களினால் மாத்திரம் நாம் சரியாய் நிதானிக்கக் கூடாது.

சிறுமிகள் விளையாட்டுக் கொம்மி.

சததனு வுபாக்கியானம்.

(௬௮-ம் பக்கத் தொடர்.)

இப்படித் தம்பதிக ளிருவர் கூடி
இனிதா யர்சாளு நாளில்
செப்பற்கரிய கார்த் திகை யேகாதசி
சீரியவிரதஞ் செய் தருணம். (10)

கங்கை நீராடிக் கரையி லேறிவந்த
காலத்திலே யொரு பாஷாண்டி
சங்கையுட னெதிர் கண்ட தோஷம்போக
ஜயமணி மவுனங் கொண்டாள். (11)

சாத்திர விதிப்படி சூர்ய நமஸ்காரஞ்
தையனல்லாள் செய்தே யகல
வேத்திர வித்தைசொல் லாசிரிய விட
வேண்டிய சிநேக னென்றரசன். (12)

நின்று கவுரவ மாகச் சற்றுநேரம்
நேசத்துடன் சம்பாஷித்த பின்
கன்று மேய்த்திட்ட கண்ணன் கழல்போற்றி
காதலொடு விரத முடித்தான். (13)

ஒழுக்கம் வழக்குத் தண்ட மெனமூன்று
முரியதாய்க் கொண் டரசாண்ட
இழுக்குறு மன்னன் காலமுறை யாக
இயமன் வசமாகி யிறந்தான். (14)

பத்தியும் புத்தியுங் கற்பும் வளர்ந்திடும்
பாவை ஜயமணி மிகநொந்து
நித்திய தேவனைத் துதித் துடன் கட்டை
நிலையாயேறி மெய்யாவி விட்டாள். (15)

பாஷண்ட னுடனே பேசிய தோஷத்தால்
பார்த்திபன் நாயாகப் பிறந்தான்
தோஷ மதைப்போக்க ஜயமணி காசியின்
வேந்தனுக்குப் பெண்ணாய்ப் பிறந்தாள் (16)

கற்பில் மிகுத்தவள் செய்த புண்ணியத்தாற்
கல்விஞானமுடன் பூர்வ கியானம்
பொற்புற வளரக் கண்டு தந்தையும்
பூரித்துமணஞ் செய நினைத்தான். (17)

ஜயமணிக்கேட்டு தந்தை யிடஞ் சென்று
சரணடைந் தெனக் கிப்போது
பயனில் விவாகம் வேண்டா மென்றுமே
பாவையாளுந் தடுத்து விட்டாள். (18)

திவ்வியக் கியான மேற்கொண்ட மாது
தீவிரமுட னாராய்ச்சி செய்து
நவ்விய விதிசை நகரிற் கணவன்
நாயா யிருப்பதைத் தானறிந்தாள். (19)

அறிந்தபின்னே யங்கு சென்று நல்லுணவு
மளித்துப் பிரிய வுபசாரஞ்
செறிந்து செய்து வர நாயாகிய
சேவகனுண்டு மிகக் களித்தே. (20)

நாயின் சாதிகளுக் குற்ற வறிவினை
நாட்டியே மிகப் பணிவாகச்
சேயிழை தனக்கு வந்தன நற்குறி
செய்ய நாணங் கொண்டு நின்றான். (21)

பூர்வத்திற் கரும மென்செய்தேனோ நான்
புவியின் மறுஜன்மங் கொள்ள
ஆர்வ முடன் கணவனு நாயாக
அமைந்தும் பணியக் கண்டேனே. (22)

என்று மனந்தளர்ந் திருகை கூப்பி
யேந்தலே! யாசைக் கினியானே!
நன்றாக வும்மிட பூர்வ ஜன்மத்தையே
நாடிக் கவனித் திடுமென்பாள். (23)

விரத தினத்திற் கங்கையி னீராடி
விதியின்றி யொரு பாஷண்டிபால்
சரச சல்லாபஞ் செய்ததினா லிந்த
சண்டாளநாயின் ஜன்மங் கொண்டீர். (24)

உமக்கு நானடி யாளா மனைவியென்
றுணர்ந்து வணக்கம் விடும் பாவஞ்
சுமக்கச்செய்கிறீர் வேண்டா மினியிது
சொரூபத்தை யறிந்திடு மென்றாள். (25)

இன்னவா றாகக் கியாபக மூட்டவே
ஏந்தலான நாய் வெகுநேரம்
முன்ன மெடுத்த ஜன்மத்தை நினைத்து
மூளாவெறுப்பை யடைந்தது காண். (26)

அப்பட்டணம் விட்டுக் கானகமே நாடி
அரியதோர் மலை மீதேறி
குப்புற விழுந்து உயிரை நீக்கியே
குள்ளநரி யாகப் பிறந்தான். (27)

இதையும் பூர்வ ஞான திருஷ்டியால்
ஏந்திழை ஜயமணி யறிந்தே
பதைபதைத் துயர் கோலாகல மென்னும்
பருவதத்திடஞ் சென்று கண்டாள். (28)

நாயகனே! யிது தெய்வத் திருக்கூத்தோ
நம்முடைய பவப் பெருக்கோ
தீயனிடதோஷத் தாலேமுன் னாயாக
தேவரெடுத்த தறியீரோ. (29)

மனைவியு நானப்போ நினைப்பு மூட்டினேன்
மறந்திரோ நானறியே னென
நினைவு நரிக்கு வந்து பசித்துயிர்
நீக்கிசென்றா யானது காண். (வரும்.) (30)